இயங்கா வனமென் மகளொரு காளைபின் னேகினளென்
றுயங்கா தொழியஃ துலகியல் பாலுல வும்புயலேய்
வயங்கா டகமதில் சூழ்தஞ்சை வாணன் மணங்கமழ்தார்
புயங்காதல் கொண்டணைந் தாளய னார்தந்த பூமகளே.

இ - ள். ஒருவருஞ் சஞ்சரியாதவனத்தில் என்மகளொரு காளைபின் ஏகினளென்று வருந்தாதொழி; அவ்வாறேகுதல் உலகவியல்பு; யாங்ஙனமெனின், வானத்துலவும் புயலைத்தீண்டி விளங்கப்பட்டபொன்மதில்சூழ்ந்த தஞ்சைவாணனது மணங்கமழ் மாலையணிந்தபுயத்தைக் காதல்கொண்டு அயனார் படைத்த பூமிதேவியணைந்தாள். எ - று.

இயங்கல் - சஞ்சரித்தல். ஏகினள் - போயினள். உயங்கல்-வருந்தல். வயங்கல் - விளங்கல். ஆடகமதில் - பொன்மதில். அயனார் - பிரமனார். பூமகள் - பூமிதேவி. (௩௪௨)

செவிலியெயிற்றியோடுபுலம்பல்.

செவிலியெயிற்றியொடுபுலம்பல் எ - து. செவிலிபாலைநிலத்துப் பெண்ணொடு புலம்பிக்கூறல்.

செருமக ளேயும் புயத்தய லான்பின் செலவிடுத்தென்
ஒருமக ளேயென் றுளையயிர்த் தேன்புனை யோவியம்போல்
வருமக ளேதஞ்சை வாணனென் னார்துன்னும் வன்சுரத்தோர்
அருமக ளேயுரை யாயவள் போன வதரெனக்கே.

இ - ள். போர்மகள்பொருந்திய புயத்தையுடைய அயலான்பின்னே போகவிடுத்தஉன்னை என்னுடைப்பற்ற மகளேயென்று ஐயமுற்றேன், அலங்கரிக்குஞ் சித்திரப்பாவைபோல் வரப்பட்ட பெண்ணே! தஞ்சைவாணனது பகைவராயுள்ளார்நெருங்கும் வலியகாட்டிலிருக்கும் எயினருக்கு அருமையாகிய மகளே! அம்மகள் போன்வழியை எனக்குச் சொல்வாயாக. எ - று.

செருமகள்-வீரமகள். அயிர்த்தல்-ஐயமுறல். ஓவியம்-சித்திரப்பாவை. அதர்-வழி. இப்பாட்டில் இரண்டு முன்னிலைவந்ததற்கு இலக்கணமும் உதாரணமும் களவியலிற்கூறினும் ஆண்டுக் காண்க. (௩௪௩)

செவிலிகுரவோடுபுலம்பல்.

(இது வெளிப்படை.)

இரவேய் குழலியிவ் வேதிலன் பின்செல்ல லென்றுசொல்லாக்
குரவே யிறவுங் கொடியைகண் டாய்கொடி கோகனகம்
தரவே யெனவந்த சந்திர வாணன் றரியலர்போம்
சுரவே யழல்வழி யேதனிப் போயவென் றோகையையே.

இ - ள். தருதற்குக் கொடியோடுகூடிய பதுமநிதியெனவந்த சந்திரவாணன்தரியலர்போங் காட்டில் மூங்கிலழல்பொருந்திய வழியிற்றனியே போன என்றோகைபோல்வாளை நீ இவ்விடைக்கண்டுழி இருள்போன்ற குழலாய்! இவ்வயலான்பின் செல்லற்கவென்று சொல்லாதகுரவே! நீமிகவுங் கொடியை. எ - று.

எனவே,—நீசொன்னால் மீளாளல்லள்; வாளாவிருத்தல் அறவுங்கொடியையென்று கூறினாள். ஏதிலன் - அயலான். 'குரவேகொடியை' என்னையும். கொடை மிகுதியாற் கட்டிய கொடி வாணன்மேலேற்றுக; கோகனகம்-பதுமநிதி. வேயழல் - மூங்கிலிற்பிறந்தவழல். **தோகை** - ஆகுபெயர். (௩௪௪)

சுவடுகண்டிரங்கல்.

சுவடுகண்டிரங்கல் எ - து. செவிலிநிலத்தின்மேற் காலழுந்திய குறியைக் கண்டிரங்கிக்கூறல்.

தொடுசிலைக் கானவ ரோடிய வேற்றுச் சுவடுவையே
அடுசிலைக் காளை யடியவை யேயறிந் தோரறிய
இடுசிலைப் பார்புரக் குந்தஞ்சை வாண னிசைக்குருகப்
படுசிலைப் பாவை பதமிவை யேவண்டு பாடுகவே.

இ - ள். அம்புதொடுக்குஞ் சிலையையுடைய ஆறலைக்கானவர் எதிர்நிற்கமாட்டாதோடிய வேறுபட்ட அடிச்சுவடுவையே! அவரைப் பொருஞ் சிலையுடனே எமபுரப்பக்கத்தில்வீழத்துரத்திய காளையது அடிச்சுவடுவையே! தனதுவீரத்தை அறிவுடையோரறியச் சயத்தம்பம்நாட்டி உலகத்தைக்காக்குந்தஞ்சைவாணனது பொதியமலையிடத்திருக்கும் பாவையடியிவை. எ-று.

எனவே,- அடிச்சுவடு கண்டவுடன் தலைவியை நினைந்திரங்கியவாறாயிற்று. பலராய் வந்தெதிர்த்துத் தலைவனெதிர்நிற்கமாட்டாது ஒருவர் போனவழியொருவர் போகாதோடுவாரது அடிச்சுவடொருவரடிபோலொருவரடியிராது வேறுபட்டுத் தோன்றுதலால் கானவரோடிய வேற்றுச்சுவடுவையென்றும், தனித்து நிற்றலின்பாவைபதமிவை யென்றும் கருதிக்கூறினாளென்க. இடு சிலை - வெற்றியாலிடுஞ் சயத்தம்பம். இசைக்குருகப்படுசிலை - இராவணன் பிணிக்கக் குறுமுனிபாடுமிசைக்கு உருகப்பட்ட பொதியமலை. பாடு-பக்கம். உருதல்-விழுதல். (௩௪௫)

செவிலிகலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்.

செவிலிகலந்துடன் வருவோர்க்கண்டு கேட்டல் எ - து. உடன்போக்குப்போய்த் தலைவனும் தலைவியும்போல அன்புகலந்து ஆற்றிடை வருவோர் இருவரைக்கண்டு செவிலிவினாதல்.

யானகம் போத வருந்தநும் போல்வனப் பெய்திவெய்ய
கானகம் போயினர் கண்டனி ரோகற்ப காடவிசூழ்
வானகம் போர்பயில் வானவற் கீந்தருள் வாணன்றஞ்சைத்
தேனகம் போருக மாதனை யாளுமோர் செல்வனுமே.

இ - ள். கற்பகக்காடு சூழ்ந்த வானிடத்தைப் போர்செய்யுஞ் சேரனுக்குக் கொடுத்தருளப்பட்ட வாணனது தஞ்சையின் வாவியிலிருக்குந் தேனொளிவிடப்பட்ட தாமரையிலிருக்கும் மாதுபோல்வாளும் ஒருசெல்வனும் உங்களைப்போல் அழகுபொருந்தி யான்நெஞ்சுமிகவருந்த வெய்ய காட்டிடத்துப் போயினர்; நீங்கள்கண்டீரோ? சொல்வீராக. எ - று.

அகம்-நெஞ்சு. போத-மிக, வனப்பு-அழகு. கானகம்-காட்டிடம்., கற்பகாடவி-கற்பகக்காடு. வானகம்-வானிடம். வானவன்-சேரன். நருதல்-ஒளிவிடல். (௩௪௬)

அவர்புலம்பறேற்றல்.

அவர்புலம்பறேற்றல் எ - து. செவிலியிரங்கிப் புலம்புதலை எதிர்வந்தோர் தேற்றிக்கூறல்.

யான்கண்ட வண்ணலு மென்னருங் காதலி னேகியவென்
மான்கண் டனகண் மயில்கண்ட மாதரு மாதருமம்
தான்கண்ட தண்ணளிச் சந்திர வாணன் றரியலர்போம்
கான்கண்ட மெய்குளி ரப்பொய்கை சூழ்தஞ்சை காண்பர்களே.

இ - ள். யான் காணப்பட்ட தலைவனும் என்னுடைய தலைவியாகிய மானையுவமை கண்டாற்போலும் கண்ணையுடைய இம்மயில்போன்றவள் கண்ட என்னுதற்கரிய காதலினால் தலைவன்பின்போகிய மாதரும் பெரிய தருமத்தைக்கண்ட தண்ணளியையுடைய சந்திரவாணன்தரியலர் செல்லுங் காட்டைக்கண்டவுடம்பு குளிர இப்போது பொய்கைசூழ்ந்த தஞ்சையைக் காண்பார்கள். எ - று.

'யான்கண்ட வண்ணலு மென்மயில்கண்ட மாதரும்' என்று கூறவே, எனக்கவன்றோன்றாமல்மறைந்தகின்றான்; இவளும்அத்தன்மையளாதலின், இவள் அவனைக்கண்டதாகவும் தானவனைக்கண்டதாகவும் கூறினார். மயில் ஆகுபெயர். தண்ணளி-அன்பு. தலைவியை யான் கண்டவென்றுகூறாது, என் மயில்கண்ட மாதவொன்று கூறியதென்னையெனின், தலைவன் காணுந் தன்மையளல்லன், தையலார்காணுந்தன் மையளல்லள் ஆதலால் இவ்வாறுகூறினார். என்னை, †"மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்:- பலர்காணத் தோன்றன் மதி." என்னுந் திருக்குறளினானுணர்க. (௩௪௭)

---

† திருக்குறள், சே. ௧௧௧௯.

செவிலிபுதல்வியைக்காணாதுகவலைகூர்தல்.

செவிலிபுதல்வியைக்காணாது கவலைகூர்தல் எ - து. செவிலி தன் புதல்வியைக்காணாது துன்பமிகுதல்.

நாணினுந் தாரணி கற்புநன் றென்று நயந்துமுத்தம்
பூணினும் பாரமி தென்னுமென் பொன்னையிப் போதெனக்குச்
சேணினுஞ் சார்புகழ் வாணன்றென் மாறைமன் சேரலனைக்
காணினுங் காணவந் தோவரி தாலிந்தக் கானிடையே.

இ - ள். நாணைப்பார்க்கவும் முல்லைமாலையணிந்த கற்பு நன்றென்ப தனை விரும்பிச்சென்றாள்; ஆதலால் முத்தாரம்பூணினும் பாரமென்று சொல்லும் மெல்லியவியல்பினையுடைய என்பொன்னை எனக்கிப்போது சேணினுஞ்சேர்ந்த புகழையுடைய வாணனாகிய தென்மாறை மன்னன் பகைவனா இந்தக் கானிடைக்காணினுங் காணவரிது, அந்தோ யானென் செய்வேன். எ - று.

நயந்து என்புழிச் 'சென்றாளாதலால்' என்னுஞ் சொல்வருவித்து முடிக்க. 'எனக்கிப்போது'எனஇயையும். சேண் - தூரம். காணினும்என்னும் உம்மை அவர்கரந்து திரிதலின் அருமைதோன்றநின்றது. அந்தோ-இரக்கக் குறிப்பு. ஆல்: அசை. (௩௪௮)

கற்பொடுபுணர்ந்தகவ்வை முற்றிற்று.

மீட்சி.

மீட்சி எ - து. மீண்டுவருதல். செவிலி புதல்வியைக்காணாது மீண்டு வருதலும், உடன்போய் தலைவனும்தலைவியும் மீண்டுவருதலும் அடங்கப் பொதுப்படமீட்சியென்றுகூறினர்.

* 'தெளித்தன்மகிழ்ச்சிவினாதல் செப்பலென, வெளிப்படவுரைத்த மீட்சிநால்வகைத்தே'.—என்னுஞ்சூத்திரவிதியால் மீட்சிநால்வகைப்படும்.

தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தல்.

ஏடார் மலர்க்குழல் வல்லினைய யன்னையித் தீவினையேன்
நாடா விடமில்லை ஞாலத் தகல்வயி னன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடுகடந்து தன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் றானொரு வள்ளலின்றே.

௩௪௯ [இது பிறசெய்யுட்கவி.]

---

* அகப்பொருள் விளக்கம், வரைவியல், சூ. ௧௧.

தலைவன்தம்மூர்சார்ந்தமைசாற்றல்.

தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றல். எ - து. ஐம்பத்து நான்காநாள் தலைவன்மீட்சியில் தலைவியதூரைத் தாம்சார்ந்தமை தலைவிக்குச்சாற்றல்.

நினையா னெதிர்ப்பட்ட நீடிருங் குன்றிது நீகுடைந்த
சுனையா மதுமலர்ச் சோலைக ளாமுவை தூயவண்டல்
மனையா மிவையினி வாணன்றென் மாறையை வாழ்த்தலர்போல்
இனையா தெழுந்தருண் மானனை யாய்நம் மெழினகர்க்கே.

இ - ள். மானனையாய்! நின்னை யான் முன்னெதிர்ப்பட்ட நீண்ட பெரிய குன்றிது; நீ குடைந்துவிளையாடிய சுனையாமது; நீவிளையாடியமலர்ச் சோலைகளாமுவை; மாசிலாத வண்டலம்பாவைசெய்து விளையாடிய சிற்றில்லமிவை; இன்று வாணன்றென்மாறையை வாழ்த்தாதவர்போல வருந்தாது நமதெழிலையுடைய நகர்க்கெழுந்தருள். எ - று.

நான் அவள் என்னும் வேற்றுமையின்மையான் 'நம்மெழினகர்' எனக் கூறினார். இனி-இன்று. இனையாது-வருந்தாது. (௫௰)

தலைவிமுன்செல்வோர்தப்போடுதான்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்.

(இதுவெளிப்படை.)

புனையல ரேதிலர் காதலர் தாயர் பொறுமையிற்போய்
இனைதுயர் யாதொன்று மின்றிவெங் கானிகந் தியானுமம்பொன்
வனைகழ லானும் வருவதெல் லாஞ்சென்று வாணன்றஞ்சை
துனைவுட னேகுகின் றீர்சொல்லு வீரென் றுணைவியர்க்கே.

இ - ள். வாணனது தஞ்சைக்குவிரைவுடன் செல்கின்றீர்! புனைந்து அலரைத் தூற்றுகின்ற அயலாரென்னிடத்துக் காதலையுடையராகிய தாயர் இவர்களது பொறுமையினால் போய்வருந்துந்துன்பம் ஒன்றுமின்றி வெவ்விய காட்டைநீங்கிப்போய் மீண்டியானும் அழகியபொன்னால் வனைந்த கழலையுடையானும் வருகின்றசெய்தியெல்லாஞ் சென்று என்றுணைவியர்க்குச் சொல்லுவீர். எ - று.

புனைதல்-இல்லதனையுண்டாக்கிக் கூறுதல். ஏதிலர்-அயலார். இனைதுயர் - வருந்துந்துயர். இகந்து-நீங்கி. துனைவு - விரைவு. * "கதழ்வுந் துனைவும் விரைவுப்பொருள." என்பதனாற்கண்டுகொள்க. (௫௰௧)

முன்சென்றோர்பாங்கியர்க்குணர்த்தல்.

(இதுவெளிப்படை.)

போதலர்க் கல்லை முனியுமெல் லோதிப் புனையிழைதன்
காதலன் பின்வரக் கண்டன மியாங்கண்டல் வேலிமுந்நீர்
மாதலந் தன்னிரு தோள்வைத்த வாணன்றென் மாறைவண்ணச்
சூதலர்த் தொல்கவின் மித்திரண் மாமுலைத் தோகையையே.

---

* தொல். சொல். உரியியல், சூ. ௧௧.

இ - ள். தாழைக்காட்டை வேலியாகவுடைய கடல்சூழ்ந்த பெரிய புவியைத் தன்னிருதோளில் வைத்தவாணன் தென்மாறைநாட்டில் அழகு பொருந்திய சூது இடிக்கண்பீட்டுச் சுருங்கப்பூரித்துத் திரண்டபெரிய முலையையுடைய தோகைபோல்வீர்! போதுகள்மலர்ந்து இருளைச்சினக்கும் மெல்லியகுழலினையும் புனைந்த பூணினையுமுடையாள் தன்காதலன்பின்வர யாம் கண்டனம். எ - று.

அல்-இருள். ஓதி - கூந்தல். மேல்லோதிப் புனையிழை-அன்மொழித்தொகை. கண்டல் - தாழை, புயவலியால் குறம்படக்கிப் பூமியைக்காத்தலான் 'மாதலந்தன்னிருதோள்வைத்தவாணன்' எனக்கூறினர். அலர்தல்-இடுக்கண்.† "அலங்தோர்க்களிக்கும்பொலம்பூட்டுசேஎய்" எனவும், "அற்றார்க்கு மலர்ந்தார்க்கும்" எனவும் பிறருங்கூறிய வாற்றானுணர்க. விம்முதல்-பூரித்தல். (௯௫௨)

பாங்கியர்கேட்டுநற்றாய்க்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

வாளேய் விழிநின் மயிலனை யாடஞ்சை வாணன்வெற்பில்
வேளே யனைய விடலைபின் னேசுர மீண்டினிநம்
கேளேய் பதிவரு மென்னநல் லோர்சொல்லக் கேட்டனமிந்
நாளே யனையநன் ஞளுள வோசென்ற நாள்களிலே.

இ - ள். வாள்போன்ற விழியினையுடைய நின்மகளாகிய மயில்போன்றவள் தஞ்சைவாணன் வெற்பிடத்துக் காமனையொத்த விடலை பின்னே சுரம்போய்மீண்டு நஞ்சுற்றத்தாரிருக்கும் நகரின்கண்ணே வருமென்று நல்லோர் சொல்லக்கேட்டனம், ஆதலின் இந்நாளைப் போன்ற நன்னாள் கழிந்தநாள்களிலேயுளவோ? எ - று.

வேள்-காமன். விடலை - பாலைநிலத்தலைவன். கேள் - சுற்றம். ஏகாரம் மூன்றும் ஈற்றசை. (௯௫௧)

நற்றாய்கேட்டவனுளங்கோள்வேலனைவினவுதல்.

(இது வெளிப்படை.) வேலன்-வெறியாட்டாளன்.

தென்மாறை நன்னகர் மன்னவன் வாணன் செழுந்தஞ்சைசூழ்
பொன்மா திரத்துப் புலனுணர் வீர்சுரம் போய்வருவோன்
என்மானை யென்மனை யிற்றரு மோதன்னை யீன்றநற்றாய்
தன்மா நகருய்க்கு மோசொல லுவீரொன்று தானெனக்கே.

இ - ள். தென்மாறைநகர்க்கு மன்னவனாகிய வாணனது செழுந்தஞ்சையைச்சூழ்ந்த அழகியதிக்கினுள்ளார் நினைக்குமறிவை எல்லாமறி

† திருமுருகாற்றுப்படை, பழமுதிர்சோலை, வரி, ௨௭௧.

வீர்! சுரம்போய் மீண்டுவருந் தலைவன் மானனையாளை என் மனையிலே தருமோ? தன்னையீன்ற நற்றாயிருக்கும் தன்பெரியநகர்க்கே செலுத்துமோ? எனக்கொன்று சொல்லுவீர். எ - று.

பொன் - அழகு. மாநிரம் - ஆகுபெயர். புலன் - அறிவு. உய்த்தல் - செலுத்தல். வேலன் - முருகவேளடையாளமாய்க்கையிலே வேல்பிடித்துத் திரிபவன்.

தலைவன் சேணகன்றமை செவிலிதாய்க்குணர்த்தலும் தலைவன்றம்மூர் சார்ந்தமை சாற்றலும்இரண்டுந்தெளிதல்; தலைவிமுன்செல்வோர் தம்மொடு தான்வரல்பாங்கியர்க்குணர்த்திவிடுத்தலும், பாங்கியர்நற்றாய்க்குணர்த்தலும் இரண்டுமகிழ்ச்சி; நற்றாய்தலைமகனுளங் கோள்வேலனைவினாத லொன்றும் வினாதல்; பாங்கியர்க்கு முன்செல்வோர் உணர்த்தலொன்றும் செப்பல்.

மீட்சிமுற்றிற்று.

தன்மனைவரைதல்.

தன்மனைவரைதல் எ - து உடன்போய் மீண்டுவந்த தலைவன்தலைவியைத்தன்னூர்க்குக்கூட்டிப்போய்த் தன்மனையின்கண் வரைந்துகோடல்.

‡“வினாதல்செப்பல் மேவலென் றிறைவன்
றனூரில்வரைதன் மூவகைத்தே”.—என்னுஞ் சூத்திரவிதியால் தன்மனைவரைதல் மூவகைப்படும்.

நற்றாய் மணனயர்வேட்கையிற் செவிலியை வினாதல். எ - து. தலைவிநற்றாய் தன்மனையின் மணஞ்செய்யும் விருப்பினாற் செவிலியைவினாதல். இதற்குச் செய்யுளிற்கவியில்லை.

*தாமாக மேவினு நம்மனைக் கேவந்து தண்சிலம்பார்
மாமா தினைமணஞ் செய்வதற் கேமரு வார்கமலப்
பூமாது கேழ்வன் புகழ்த்தஞ்சை வாணன் பொருப்பிலினி
யாமா றுயிரனை யாய்சொல் வமோவவ ரன்னையர்க்கே. (௩௫௫)

செவிலிக்கிவளைவரைந்தமையுணர்த்தல்.
(இது வெளிப்படை.)

என்னா மியம்புவ தியாய்க்கினி நாமன்னை யின்றுதம்மில்
கொன்னாரு நித்திலக் கோதைநம் மாதைக் கொடிநெடுந்தேர்க்
கன்னாடர் மண்கொண்ட வாணன்றென் மாறையிற் காதலர்தாம்
நன்னாண் மணம்புணர்ந் தாரென்று தூதர் நவின்றனரே.

---

‡ அகப்பொருள் விளக்கம், வரைவியல், சூ. உ௩.

* இக்கவி யாழ்ப்பாணத்து வல்வை-சபாபதிபிள்ளையவர்கள்பதிப்பித்த மூலப்பிரதியில் காணப்பட்டபடியே பதிப்பிக்கப்பட்டது.

இ - ள். அன்னையே! கொடிகட்டிய நெடுந்தேரையுடைய கன்னடர் மண்ணைக்கொண்ட வாணன்தென்மாறை நாட்டில் காதலர்தாம் தம்மில் லீத்துப் பெருமையார்ந்த முத்துமாலையைத்தரித்த நம்மாதை நல்லநாளிலே மணம்புணர்ந்தாரென்று வந்ததூதுவர் சொன்னார், இன்று நாம்ஆய்க்கியம்புவது இனி யென்னா? எ - று.

கொன். பெருமை, நித்திலக்கோதை-முத்துமாலை. நவிலல் - சொல்லல்.

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

எனைக்கே ளிருநின் றியற்றவங் கேமண வின்பமெய்தி
அனைக்கேண் மைநண் ணிய வண்ணல்பின் னாகநம் மன்னையின்றிம்
மனைக்கே வருமென வந்துசொன் னார்தஞ்சை வாணன்வெற்பில்
சுனைக்கேழ் நனைக்கமழ் நீர்க்குழ லாய்சில தூதரின்னே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பிடத்திருக்குஞ் சுனையிற்பூத்தநிறத்தையுடைய கள்பொருந்திய கழுநீரைச்சூடிய குழலாய்! எல்லாக்கேளிரும் மணப்பந்தரில்வந்துநின்று மணச்சடங்கு செய்ய, தலைவனூரில் மணவின்பத்தையெய்தி அத்தன்மைத்தாகிய நட்பைப்பொருந்திய தலைவன்பின்னே நம்மன்னைபோல்வாள் இன்று இம்மனையிடத்து இப்போது வருமெனச்சில தூதர்வந்துசொன்னார். எ - று.

எனைக்கேளிரும் - எல்லாக்கேளிரும். அனைக்கேண்மை-அத்தன்மைத்தாகியவுறவு "அனைநிலைவகையோடாங்கெழுவகையால்"—என்னுஞ்சூத்திரத்து உரையாசிரிய ருரையானுணர்க. அண்ணல்-தலைவன். ஆக-பிரிவிலசைநிலை, †"ஆகவாக வென்பதென் னு-மாவயின் மூன்றும் பிரிவிலசைநிலை" என்னுஞ் சூத்திரத்தானுணர்க. 'காமொ திர் கானம்பாடினேமாக' என்னும் உதாரணத்தானுமுணர்க. அன்னைகாதல்பற்றிவந்த சொல். கேழ்-நிறம். நனை-கள். இன்னே- இப்போதே. (௩௫௭)

தலைவன் பாங்கிக்கு யான்வரைந்தமை நுமர்க்கு இயம்புகென்றென்றல்.

(இது வெளிப்படை.)

கோபுரஞ் சோலை கொடிமதின் மாடங் குலாவிமையோர்
மாபுரம் போலுந்தென் மாறைவ ரோதயன் வாணன்வெற்பில்
நீபுரத் தேதந்த மாதையாங் கியாம்வரை நீர்மைசொன்ன
நூபுரஞ் சூழடி யாய்சென்று கூறு நுமர்தமக்கே.

இ - ள். பொன்னால்செய்தசிலம்பு சூழ்ந்தஅடியினையுடையாய்! கோபுரமுஞ் சோலையுங்கொடியும்மதிலும்மாடமும்விளங்கப்பட்ட அமராவதியை யொக்கும் தென்மாறை நாட்டில் வரோதயனாகிய வாணன்வெற்பில்

---

† தொல். சொல். இடையியல், சூ. ௫௨.

நீபாதுகாத்துத் தந்த மாதை என்னூரில் வரைந்தநீர்மையை நமர்தங்களுக்குச் சென்றுசொல்லாய். எ - று.

'கோபுரஞ்சோலைகொடிமதின் மாடம்' என்புழி எண்ணும்மை தொக்குநின்றன. குலவுதல் - விளங்குதல். இமையோர்மாபுரம் - அமராவதி. புரத்தல் - காத்தல். வரைந்தநீர்மை - வினைத்தொகை. நூபுரம் - சிலம்பு (௧௫௮)

பாங்கிதானதுமுன்னேசாற்றியதுரைத்தல்.

(இது வெளிப்படை.)

அன்னைக் கியம்பின ளண்டகை யான்முன் னறிந்து தென்னன்
தன்னைப் பணிந்துகுற் றேவல்செய் யாது சமர்க்கெழுந்த
மன்னைப் புறங்கண்ட வாணன்றென் மாறை வரையிலெங்கள்
பொன்னைப் புணர்ந்துநுங் கேண்முன்னர் நீபொன் புனைந்ததுவே.

இ - ள். ஆண்டகையே! பாண்டியனைப்பணிந்து குற்றேவற்றொழின்முறைமைசெய்யாது போர்க்கெழுந்த மன்னைப்புறங்கண்ட வாணன்றென் மாறைவரையில் எங்கள் பொன்போன்றவளைக்கூடி நுஞ்சுற்றத்தார் முன்னம் நீதிருப்பூட்டியது யான்முன்னையறிந்து அன்னைக்கியம்பினேன். எ-று.

ஆண்டகை - ஆண்மைவிளி. தென்னன் - பாண்டியன். குற்றேவல் - சிற்றுளாய்ச்செய்யுமேவல். பொன் - ஆகுபெயர். பொன்புனைதல் - திருப்பூட்டுதல்.

மணனயர்வேட்கையினற்றாய் செவிலியைவினவுதலொன்றும் வினவுதல், வரைந்தமை பாங்கி செவிலிக்குணர்த்தலும், வரைந்தமை செவிலிநற்றாய்க்குணர்த்தலும், பாங்கிதானது முன்னேசாற்றியதுரைத்தலும் மூன்றுஞ்செப்பல், தலைமகனூர்க்கியம்புகென்றென்றலொன்றும்மேவுதல். (௧௫௯)

தன்மனைவரைதல் முற்றிற்று.

உடன்போக்கிடையீடு.

உடன்போக்கிடையீடு எ - து. நம்மனையில் வரைந்துகொள்ளாது தன்னூரில் வரைந்தானென்று தலைவிசுற்றத்தார் வெறுப்படைதலால் தலைவியையுடன்கொண்டுபோம்போது தலைவி சுற்றத்தாரிடையீடுபட்டு மீண்டு தலைவிவருதல்.

‡ "போக்கறிவுறுத்தல் வரவறிவுறுத்த
னீக்கமிரக்கமொடு மீட்சியென்றுஅங்
குடன்போக்கிடையீ டொருநால்வகைத்தே."—என்னுஞ் சூத்திரவிதியால் உடன்போக்கிடையீடு ஒருநால்வகைப்படும்.

---

‡ அகப்பொருள் விளக்கம், வரைவியல், சூ-௨௭.

நீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத்தன்செலவுணர்த்திவிடுத்தல்.

நீங்குங்கிழத்தி ... ... விடுத்தல். எ-து. ஐம்பத்தைந்தாநாள் தன்னூரைவிட்டு நீங்குங்கிழத்தி எதிர்வருவோர்தம்மொடு தலைவனுடன் செல்லூர் தன்செலவைப் பாங்கியர்க்குணர்த்திவிடுதல்.

வளவேய் மிடைந்த வழிப்படர் வீர்செங்கை வாணன்றஞ்சைத்
தளவேய் நகையென் றுணைவியர்பாற் சென்றுசாற்று மின்போர்க்
களவே லனையவோர் காளைபின் போயினள் கான்பனிநீத்
திளவேனில் வல்விபெற்றுங் செவ்வநீத்தெழி லெய்தியன்றே.

இ - ள். வளம்பொருந்திய மூங்கில்மிடைந்தவழியில் செல்கின்றீர்! பனிக்காலத்தைநீத்துஇளவேனிற்காலத்தை வல்விபெற்றாற்போல்துன்பமெல்லாமொழித்து அழகைப்பொருந்திக் காட்டிடத்தில் போர்க்களத்தின் முருகவேலையொத்த ஓர்காளைபின்போயினள் என்றுசிவந்தகையையுடைய வாணன் தஞ்சையிலிருக்கும் தளவையொத்த நகையையுடைய என்பாங்கியர்பாற்சென்றுசொல்லுமின். எ - று.

மிடைதல் - நெருங்குதல். படர்தல் - செல்லுதல். தளவு-முல்லை. கான்-காடு. எவ்வம்-துன்பம். எழில்-அழகு. சுற்றத்தார்செய்தவெறுப்பைஎவ்வநீத்தெனக் குறிப்பாற் கூறியவாறுணர்க. (௩௬௦)

தலைமகள்தன்செலவு ஈன்றட்குணர்த்தி விடுத்தல்.

(இது வெளிப்படை.)

வாயார நுங்களை வாழ்த்துகின் றேன்றஞ்சை வாணன்வெற்பில்
சாயாத மாதவத் தாழ்சடையீ ரன்பர் தம்மொடின்றியான்
சேயாறு தேர்மிசைச் செல்வதெல் லாமெங்கள் சேரியிற்சென்
றியாயாகிய கொடி யாட்கினி தாக வியம்புமினே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பில் கேடில்லாதமாதவத்தினைற்கொண்ட தாழ்ந்தசடையுடைய வந்தணீர்! நுங்களை வாய்நிறைய வாழ்த்துகின்றேன்; தலைவர் தம்முடனே இன்றுயான் சேண்வழியில்தேரின்மீது செல்வதெல்லாம் எங்களூரின்கண் சென்று தாயாகிய கொடியாட்கு இப்போதே இன்பாகச் சொல்லும். எ - று.

சாயா-கேடில்லாத. சேயாறு-சேண்வழி. இனிதாக என்பது குறிப்பாற்கூறியவெறுப்புமொழி. (௩௬௧)

நற்றாய்க்கு அந்தணர்மொழிதல்.
(இது வெளிப்படை)

மருள்கொண்ட சிந்தை மலைகிழ வோய்தஞ்சை வாணன்வெற்பில், வெருள்கொண்ட மென்பிணை வென்றகண் ணாள்வென்றி வேல்வலங்கை, அருள்கொண்ட நெஞ்சினொ ரண்ணல்பின் னேயகன் றாள கல்வான், இருள்கொண்ட கொண்டல்செல் லாவரை சூழு மிருஞ்சுரத்தே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பினிடத்து மகளைக் காணேமென்று மயக்கங்கொண்ட மலைக்கரசியே! வெருட்சிகொண்ட மென்பிணைமானை வென்றகண்ணளாகிய நின்மகள் வெற்றிவேலை வலங்கையினும் அருளை நெஞ்சினுங்கொண்ட ஓர் வேந்தன்பின்னே அகன்ற வானிடத்துச் சூல்கொண்டமேகம் ஒருகாலுஞ்சென்றறியாத மூங்கில்சூழ்ந்த பெரியகாட்டிடத்தேயகன்றாள். எ - று.

மருள் - மயக்கம். வெருள் - வெருட்சி. பிணை-பெண்மான். 'வென்றி வேல்வலங்கை யருள்கொண்ட நெஞ்சின்' என்புழி உம்மைத்தொகை; வென்றிவேல் வலங்கையினும், அருள்நெஞ்சினுமென்றது உற்றார்வணங்காக்கால் வேல்செலுத்தலும், வணங்குங்கால் அருள்செலுத்தலும் கருதியென்க. வரை - மூங்கில். (௩௯௨)

நற்றாயறத்தொடு நிற்றலின் தமர்பின்சேறலைத் தலைவிகண்டு தலைவற்குணர்த்தல்

உவலைப் பதுக்கை முரம்பு செல்லாம லுலகமங்கை
தவலைத் தவிர்த்த தமிழ்த்தஞ்சை வாணன் றரியலர்போம்.
கவலைக் கடத்துச் சிலைத்திரை கோலிக் கடும்பகழித்
துவலைப் படைக்கட றோன்றல்பொற் றேர்வங்கஞ் சூழ்கின்றதே.

நற்றாயறத்தொடு......உணர்த்தல் எ - து. அந்தணர் மொழியவறிந்த நற்றாய் குறிப்பான் அறத்தொடு நிற்றலில் தமர் சினந்து குழாங்கொண்டு பின்சேறலைத் தலைவிகண்டு தலைவற்குணர்த்தல்.

இ - ள். தோன்றலே! தழைகளொடுகூடிய குறுந்தூறுகள் மூடிமேடு செல்லாமல்நிலமங்கையது வளங்கெடுதலைத்தவிர்த்ததமிழ்த்தஞ்சைவாணன் பகைவர் செல்லுங் கவர்வழியில் வில்லாகிய திரைகளையுண்டாக்கிக்கடிய அம்பாகிய துவலைகளைச்சிதறிப் படையாகிய கடல் நினதுபொற்றேராகிய மரக்கலத்தைச் சூழ்கின்றது. எ - று.

உவலை - தழை; * 'உவலைக் கூரையொழுகிய தெருவில்' என முல்லைப் பாட்டிற்கு நச்சினார்க்கினியார் தழையாலேவேய்ந்தகூரையென வெழுதிய

* முல்லைப்பாட்டு, வரி, ௨௯.

வுரையானுமுணர்க. பதுக்கை-சிறுதூறு, முரம்பு-மேடு. தவல்-கேடு.கவலை-கவர்வழி. கடம் - காடு. திரை - அலை. பகழி-அம்பு. வங்கம் - மரக்கலம். இஃதியைபுருவகம். (௩௬௩)

தலைமகனைத் தலைமகள் விடுத்தல்.

(இது வெளிப்படை.)

ஆறலை வெஞ்சிலைக் கானவ ரேலென்கை யம்பொன் றினால்
நூறலை யஞ்சலை நுண்ணிடை யாய்நம ரேலவர்முன்
சேறலை யஞ்சுவல் செல்லல்பைம் பூகச் செழும்பழுக்காய்
தாறலை தண்டலை சூழ்தஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே.

இ - ள். நுண்ணிடையாய்! ஈண்டுக் கூடிவருகின்றோர் வழியை அலைக்கும்வெய்ய சிலையையுடைய வேடராகில் என்கையிற்பிடித்த ஓரம்பினால் புறப்பொருளில் தும்பைத்திணையின் நூழிலாட்டென்னுந் துறைதோன்றக்கொன்றுகுவித்தலையஞ்சேன்; நம்சுற்றத்தவரேயாகில் அவர்முன் செல்லுதலை யஞ்சுவேன்; ஆதலான் இவரால் அப்பரியகமுகினது செழித்தபாக்குத்தாறுகாற்றலைசையுஞ்சோலைசூழ்ந்த தஞ்சைவாணன் தமிழ்வெற்பிடத்தில் யான்செல்வேன், எ - று.

ஆறலைத்தல்-வழிபறித்தல், நூறல்-கொல்லுதல். 'நமரேலஞ்சுவேன்' என்றது நமரெதிர்ந்தழி அவரைக் கொலைசெய்யவேண்டும், செய்தழி நீ துயருழத்தி ஆதலால்அஞ்சுவ னென்றான். தாறு-குலை. தண்டலை - சோலை. நூழிலாட்டென்பது ஒருவன் பலரைக்கொன்று குவித்தல்.—என்னை "பலபுடை யொருவர்க் குடைதலின் மற்றவனொள்வாள் வீசிய நூழிலும்" என்னுஞ் சூத்திரத்தானுணர்க. இதற்குக்காரணம் மதுரைக்காஞ்சியிற் கண்டுகொள்க. யான்செல்வேன் என்பது அவாய்நிலையான்வந்தது. (௩௬௪)

தமருடன்செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றரற்றல்.

தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றரற்றல். எ - து. தமருடன் செல்லப்பட்ட தலைவி அவன்புறங்காட்டிப்போதலைநோக்கிக்கவலைப்பட்டுத் தேறுதல்.

ஏமா னினைவஞ்சு மேற்காத் தவினவ் விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகப்பன் னாட்டஞ்சை வாணனென்னார்
போமா னதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே.

* இ - ள். தஞ்சைவாணனுக்குப் பகைவராயுள்ளார் செல்லுமான்சஞ்சரிக்கும் வழியிடத்து என் தந்தையர் தோன்றுதலைக்கண்டு புறங்கொடுத்துச் செல்கின்ற தலைவனது மணியிழைத்த நெடுந்தேர் நுகத்திற்பூட்டிய குதிரைகள் 'அம்புகண்ட மான்போல அஞ்சுகின்ற என்னைக்காத்தலால்

அவ்வாறித்தனது பொற்றேரிற்பூட்டிய வாவுங்குதிரைகள்போலப் பன்னாள் வாழ்வனவாக. எ - று.

ஏ - அம்பு. வாமான் - வாவுமான். * "செய்யுமென்னும் பெயரெச்சக் கிளவிக்கு மெய்யொடுங்கெடுமே யீற்றுமிசை யுகரம்" என்பதனானுணர்க. அதர்-வழி. குரகதம் குதிரை. 'கவன்றுற்றல்' என்பதனால் இக்கிளவியிரக்கத்தின் பாற்படும்.

நீங்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தலும், தன்செலவின்றாட்குணர்த்திவிடுத்தலும், ஈன்றாட்கந்தணர்மொழிதலுமாகிய மூன்றும்போக்கறிவுறுத்தற்குரிய. அறத்தொடு நிற்றலிற்றமர் பின்சேறலைத் தலைவி கண்டுரைத்தலொன்றும் அலரறிவுறுத்தற்குரித்து. தமருடன் செல்பவள் வன்புறநோக்கிக் கவன்றுற்றலொன்றும் இரக்கத்துக் குரித்தெனக்கொள்க. (௩௬௭)

உடன்போக்கிடையீடு

முற்றிற்று.

வரைதல்.

தன்னூர் வரைதலும் தன்மனைவரைதலும் என்னும் இவ்விரண்டொழித்து †"எவற்றினுங்கிழவோ - னந்தணர்சான்றோர் முன்னிட்டருங்கலந் தந்துவரைத றகுதியென்ப."—என்னுஞ் சூத்திரவிதியாற் சென்றோன் மீண்டுவந்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டுவரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்தகூறல்.

வரைதல் எ - து. ஐம்பத்தாறுநாளின் தலைவன்மீண்டு தலைவியில்லின் வாராநின்றுழி தலைவி தமரொடிர்கொண்டுபோயழைத்துவந்தபின் உலகவியற்கையின்படி பலவிதமாக அருங்கலமுதலிய வேண்டுவனகொடுத்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு மணச்சடங்குடனேவதுவை முடித்துழிக் கண்டோர் மகிழ்ந்துகூறல்.

சென்றோன்மீண்டுவந்துஅந்தணரையுஞ்சான்றோரையுமுன்னிட்டு வரைந்துகொண்டுழிக்கண்டோர்மகிழ்ந்துகூறல்.

(இது வெளிப்படை.)

சேலார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன்றென் மாறையினம்
வேலா னெனப்பிறர் வேட்டவர் யார்மணம் வெண்டுகிலின்
பாலா ரமளியும் பாற்கட லானது பங்கயக்கண்
மாலா யினனிவ னுக்திரு வாயினண் மாதுமின்றே.

---

* தொல்.சொல். வினையியல், சூ. ௬௧.

† அகப்பொருள்விளக்கம், வரைவியல், சூ. ௨௯.

இ - ள். கயலார்ந்தபுனல் பெருவெரப்பட்ட வையைசூழ்ந்த தஞ்சைவாணன் தென்மாறை நாட்டில் வெண்ணிலவின் பாண்மையார்ந்த பாயலும் பாற்கடல்போன்றது; இவ்வேந்தனுஞ் செந்தாமரைக்கண் மாலையொப்பானுயினுன், இம்மாதரும் திருவையொப்பாராயினர்; ஆதலான், நம்வேலானென மணம் வேட்டவர் பிறர் யார். எ - று.

சேல் - கயல். ஆர்தல் - பொருந்தல். புனல் - நீர். அமளி - பாயல். இங்ஙனமொரு தலைவனுக்கும் தலைவிக்கும் ஒருகால் மணமுடிப்பதன்றிப் பலகால் மணமுடிந்ததாகக்கூறுதல் உலகின்கண் வழங்குவதன்றே, இவ்வாறுகூறியதென்னையெனின்,—உடன்போய்த்தன் னூரின்கண்ணே வரைதலும், மீண்டுவந்து தன்மனையின்கண்ணே வரைதலும், அந்தணர் சான்றோரை முன்னிட்டுத் தாய்தமரறியமணச்சடங்கின் முறையேமுடியாமையான் அவை யிரண்டுமணமாகாது; அஃதென்னையெனின், உலகியல்பின்கண் தாய்தமராறியாது மணச்சடங்குமின்றி ஒருவன்உரிமை கருதித்தாலிகட்டு மணமென்று உலகின்கண்ணுள்ளார் கைக்கொள்ளார்; அவர்க்கே மீண்டும் மணச்சடங்குடனே மணமுடிப்பார்; ஆதலால், அந்தணர் முதலாயினுரை முன்னிட்டு அவன் மனையின் மணச்சடங்குடனே முடித்தலின் இதுவே மணமாயினவாறுணர்க. இவ்வாறு நாள்முறையாய்க்கூறிவந்த ஐம்பத்தாறு நாளின் மணமுடிந்ததென்றுகூறியதென்னையெனின், * “திங்களிரண்டினகமெனமொழிப.”—என்னும் அகப்பொருட்சூத்திரத்துறையில் இருதிங்களுநாலுநாளிருக்கமணமுடிப்பதியல்பென்று இலக்கணங்கூறினமையாற்கூறியதென்றுணர்க. (௩௬)

வரைவியல் முற்றிற்று.

மூன்றாவது

~~நான்காவது~~

கற்பியல்.

கற்பியல் எ - து. கற்பிக்கப்படுதலாற் கற்பாயிற்று. கற்பித்தலாவது என்னையெனின், அறிவும்ஆசாரமும்தலைவனாற்கற்பிக்கப்படுதலும், இருமுதுகுரவராற் கற்பிக்கப்படுதலும், செவிலியாற் கற்பிக்கப்படுதலும், அந்தணர் முதலிய சான்றோராற்கற்பிக்கப்படுதலும்எனக்கற்பித்தல் பலவாயின. ஆதலால் கற்பியல் எனப்பெயராயிற்று.

ஆயின்; இவ்வாறு களவினெழுகல் கற்பின்கணெழுகல் உலகின்கண் இன்றெனின், நன்று சொன்னாய்— அறிவுடையோர் மக்கட்கு மணஞ்செய்யுங்கால் இத்தன்மையானை நினக்கு மணஞ்செய்யநினைத்தேம்,

---

* இறையனாரகப்பொருள், சூ. ௩௨.

இது நினக்கியையபோ? இயையின்மையோ? எனவினவி அவரவர் கூற்றின்படிசெய்வர். அவர்கூற்றுக்கள் குறிப்பானுணர்ந்து செய்வரெனக் கொள்க. இங்ஙனம் இருவருள்ளமும் ஒத்தவழி மணஞ்செய்தலியல்பாயிற்று, ஆகவே, உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்ததாம்; உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தபோதே மெய்யுறுபுணர்ச்சி நிகழ்ந்ததாயிற்று. இதனை *"உள்ளத்தா லுள்ளலுந்தீதே பிறன்பொருளைக்-கள்ளத்தாற்கள்வேமெனல்."—என்னும் குறட்குப் பரிமேலழகருரையில் நினைத்தலுஞ்செய்தலோடொக்கு மெனக்கூறியதனானுணர்க. எனவே,—உலகின்கண் நிகழுங் கற்பொழுக்கமெல்லாம் கந்திருவமணத்தின் வழிக்கற்பென்றேகொள்க.

இல்வாழ்க்கை.

இல்வாழ்க்கை எ-து. தலைவனும் தலைவியும் இல்லின்கண்வாழும் வாழ்க்கையைக்கூறுதல்.

† "கிழவோன்மகிழ்ச்சி கிழத்திமகிழ்ச்சி
பாங்கிமகிழ்ச்சி செவிலிமகிழ்ச்சியென்
றீங்குநால்வகைத் தில்வாழ்க்கையே."—என்னும் அகப்பொருள்

விளக்கச் சூத்திரவிதியால் வாழ்க்கை நால்வகைப்படும்.

தலைவன்தலைவிமுன் பாங்கியைப்புகழ்தல்.

(இது வெளிப்படை.)

நின்மே லடுத்த பசலையின் காரண நின்றுணைவி
ளென்மே லடுத்த வியல்பினன் றேபெற்ற தேழுலகும்
தன்மே லடுத்த புகழ்த்தஞ்சை வாணன் றமிழ்க்கிரிநண்
பொன்மே லடுத்தன பொற்சுணங் கீன்ற புணர்முலையே.

இ-ள். நண்ணியபொன்மேலே நெருங்கவைத்தாற்போன்ற சுணங்கைப்பெற்று இடை வெளியின்றி நெருங்கிய முலையினையுடையாய்! தன்னிடத்துத்தோன்றிய புகழ் ஏழுலகும்நெருங்கிய தஞ்சைவாணன்தமிழ்ச்சிலம்பிடத்திருக்கும் நின்மேலேநெருங்கிய பசலைநீங்குங்காரணமாக நின்றுணைவி என்மேலே நெருங்கிய அன்பின் முறைமையினன்றோ இல்வாழப் பெற்றது. எ-று.

அடுத்தல்-நெருங்குதல். இன்-நீங்கற்பொருண்மை யுணர்த்தும்உருபாகலான் நீக்கத்தையுணர்த்திநின்றது. இயல்பு-முறைமை. தமிழ்க்கிரி-பொதியமலை. நண்பொன் - தகட்டிற்சிதறிய சிறுமைப்பட்ட பொன். புணர்முலை நெருங்குமுலை. இல்வாழ்க்கை அதிகாரத்தான் வந்தது. (௩௯௭-

---

* திருக்குறள், சே. ௨௮௨.

† அகப்பொருள்விளக்கம், கற்பியல், சூ. ௩.

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

(இது வெளிப்படை.)

தெரியா டகவிதழ்ப் பூங்கொன்றை வேணியுந் தேவியும்போல்
பிரியா துறையப் பெறுகுதிராற் பிறைமானு நெற்றிப்
புரியாழ் நிகர்மொழிப் பூவையுநீயும் புணர்ந்த பல்கேழ்
வரியார் சிலையண்ணலே தஞ்சை வாணன்றென் மாறையிலே.

இ - ள். பலநிறத்தையுடைய கட்டுதலார்ந்த சிலையையுடைய அண்ணலே! தஞ்சைவாணன் தென்மாறைநாட்டில் பிறைபோலும் நெற்றியையும் நரம்புகட்டிய யாழிசைபோன்ற மொழியையுமுடைய பூவைபோல்வாளும் நீயுங்கூடிதெரிந்தெடுத்த பொன்போன்ற இதழையுடைய கொன்றைப்பூவைத்தரித்த வேணியாகிய சிவனும் தேவியாகிய உமையும்போல என்ஞான்றும் பிரியாதிருக்கப்பெறுவீர். எ - று.

தெரியாடகம்-பொன்களிற்றெரிந்தெடுத்தபொன். கொன்றைவேணி-சிவன். தேவி-உமை. ஆல்-அசை. புரி-நரம்பு. யாழும் பூவையும் ஆகுபெயர். கேழ்-நிறம். வரிதல்-கட்டுதல். (௩௬௮)

பாங்கி தலைவியை வரையுநாளளவும்வருந்தாதிருந்தமை யுரையாயென்றல்.

(இது வெளிப்படை.)

கோங்கநன் மாமுகைக் கொங்கை நல்லாய்மணங் கூடுமெல்லை
யாங்கனை மாற்றி யிருந்தனை நீயிப மாசயிலம்
தாங்கன மாறத் தலம்புனை வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
பூங்கன மார்குழ லாரலர் மாலைப் பொறைசுமந்தே.

இ - ள். கோங்கினது நல்ல பெரியமுகைபோன்ற கொங்கையையுடைய நல்லாய்! நீமணங்கூடுமளவும் திக்கயமும் பெரியகுலவரையும் பூமிபாரமெடுத்தஇளைப்பாற அப்பாரத்தைத்தரித்த வாணன் தமிழ்த்தஞ்சையில் வாழும் பூவைத்தரித்த முகில்போன்ற குழலார் தூற்றப்பட்ட அலராற்கட்டிய மாலையினது பாரத்தைச்சுமந்து எவ்வணமாற்றியிருந்தனை. எ - று.

இபம்-திக்கயம். மாசயிலம்-குலவரை. தலம்-பூமி. கனம்-முகில். இதற்குப்பாரமாகிய குழலாரென்று பொருள்கூறுவாருமுளர். (௩௬௯)

பெருமகளுரைத்தல்.

பெருமகளுரைத்தல் எ - து. தலைவி தான்வருந்தாதிருந்த காரணம் பாங்கிக்குரைத்தல்.

மைதோய்ந் தலர்ந்த மலர்த்தடஞ்சூழ் தஞ்சைவாண னொன்னார்
மெய்தோய்ந்த செக்கிற வேல்விழி யாய்துயர் வெள்ளம்வெற்பர்.
கைதோய்ந் தளிப்பஅ சோகத்த வாய்நிறங் கால்வனவாய்
நெய்தோய்ந் தனதழை யேபுணை யாக்கொண்டு நீந்தினனே.

இ - ள். கருநிறம்பொருந்திய நீலமலரையுடைய வாவிசூழ்ந்த தஞ்சைவாணனுக்குப் பகைவராயுள்ளார் மெய்யிரத்தத்திற்றோய்ந்து சிவந்த நிறத்தையுடையவேல்போன்ற விழியினையுடையாய்! வெற்பர்கைதொட்டளிப்ப அசோகமென்கின்ற பெயரினையுடையனவாய் நிறத்தை யொப்பனவாய் நெய்யிற்றோய்ந்தாற்போன்ற தழையையே தெப்பமாகக்கொண்டு துயர வெள்ளத்தை நீந்தினேன். எ - று.

மைதோய்ந்தலர்ந்த மலர்-நீலமலர். தடம்-வாவி. தோய்ந்து-தொட்டு. அளிப்ப - கொடுப்ப. நெய் - புழுகு. புணை - தெப்பம். (௩௭௦)

தலைவனைப்பாங்கி வரையுநாளளவும் நிலைபெறவாற்றிய நிலைமைவினாதல்.

(இது வெளிப்படை.)

வரையு மிந்நாளள வெவ்வாறு நீரெம் மடந்தைமுகை
புரையு மென்கொங்கை பிரிந்திருந்தீர் முன்பொருப் பெடுத்தே
நிரையு மின்ஞாலமுங் காத்தருடா னன்பதா கையினீள்
திரையுங் குயிலும் விடாதெழு மோசை செவிமடுத்தே.

[இது பிறசெய்யுட்கவி.] (௩௭௧)

மன்றல்மனைவரு செவிலிக்கிருவ ரன்புறவுணர்த்தல்.

மன்றல்மனைவரு செவிலிக்கிருவ ரன்புறவுணர்த்தல் எ-து. கலியாண மனையில்வந்த செவிலிக்கு இருவரதுஅன்பும்உவப்பும் உணர்த்தல்.

வளங்கொண்ட தஞ்சைவரோதயன் வாணன்றென் மாறையன்னாள்
இளங்கொங்கை கொண்டுழுதிரங் கொண்மார்பின் முத்தேற்பவித்தி
விளங்கொண் பிறைநுதல் வேர்தந்து போகம் விளைத்தன்புசேர்
உளங்கொண் டருந்துதலா லன்னை யூரனுவப் புறுமே.

இ - ள். அன்னை! வளமைகொண்ட தஞ்சையில்வரோதயனான வாணன்தென்மாறைபோன்றதலைவி தன்னிளங்கொங்கையைக்கொண்டு முதிரங்கொண்ட மார்பிடத்து முத்துமாலையினது முத்தைப்பொருந்த வித்தி விளங்கும் ஒள்ளிய பிறைபோன்ற நுதலின்வேர்வைத்தரும் போகத்தை விளைத்துஅன்புசேருள்ளங்கொண்டு நுகர்வித்தலான் மிகவுமகிழ்ச்சியுறும்.

ஈரம்-அன்பு. அருந்துதல்-நுகர்வித்தல், உவப்பு-மகிழ்ச்சி. (௩௭௨)

பாங்கிஇல்வாழ்க்கைநன்றென்றுசெவிலிக்குரைத்தல்.

(இது வெளிப்படை.)

சினவேய் சுளியுங் களிற்றண்ணல் வாணன்றென் மாறையினம்
மனவே யகல்குல் வல்லியன் னாண்மறை யோர்முதலாம்
சனவே தனைகெடத் தானங்க ளீதலிற் சாலவுநன்
றெனவே நடக்கின்ற தாலன்னை நாடொறு மில்லறமே.

இ - ள். அன்னை! தன்னிழலைச் சுளித்துப்பாயுஞ் சினம்பொருந்திய களிற்றுவேந்தனாகிய வாணன்தென்மாறைநாட்டில் நம்முடைய பட்டிகை சூழ்ந்த அகன்ற அல்குலையுடைய வல்லிபோல்வாள் மறையவர்முதலாகிய சனங்களது வேதனைகெடத் தானங்களீதலின் மிகவும்நன்றென இல்வாழ்க்கை நாடொறு நடக்கின்றது. எ - று.

'சுளியுஞ்சினவேய்' எனமாறுக. மணவு - இடையிற்கட்டும் பட்டிகை. 'மறையோர் முதலாம்' எனவே நாவலர் மிடியர் பிணியாளரையுங்கொள்க. தானங்கள் - அன்னம்ஆடை நிதிமுதலியன. (௬௭௩)

மணமனைச்சென்றுவந்தசெவிலி
பொற்றொடிகற்பியல் நற்றாய்க்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

ஒன்றோ நமக்கு வந்தெய்திய நன்மை யுடனெதிர்த்தார்
வன்றோ லமர்வென்ற வாட்படை வாணன்றென் மாறையில்வாழ்
நின்றோகை கற்பினிலைமை யெண்ணாதெதிர் நின்று வெங்கிட்
டன்றோ வடக்கிருந் தாண்மடப் பாவை யருந்ததியே.

இ - ள். கோபித்தெதிர்ந்தார் வலிய யானைப்போரைவென்ற வாட்படையையுடைய வாணன்தென்மாறையில்வாழப்பட்ட நின்றோகைபோல் வாளது கற்பினிலைமையையெண்ணாது மடப்பாவைபோன்ற அருந்ததியானவள் ஒப்பென்று எதிர்நின்று தோல்வியையடைந்து புறங்கொடுத்ததனாலன்றோ தவஞ்செய்வதற்கு வடக்கிருந்தாளாதலால் மகளால் நமக்கெய்திய நன்மையொன்றோபல. எ - று.

உடன்று - கோபித்து. தோல்யானை வெங்கிட்டுப் புறங்கொடுத்துத் தோல்வியடைந்தோர் தவஞ்செய்தற்குவடக்கிருத்தல் இயல்பென்றுணர்க. கவுசிகன் வசிட்டனோடெதிர்த்துத் தோல்வியடைந்து வடதிசையிற்றவஞ் செய்ததனையுமுணர்க. அன்னையென்பது முன்னிலையெச்சம். (௬௭௪)

நன்மனைவாழ்க்கைத் தன்மையுணர்த்தல்.

நன்மனைவாழ்க்கைத் தன்மையுணர்த்தல். எ - து செவிலி நற்றாய்க்குத் தலைமகள் மனைவாழ்க்கைத்தன்மையை யுணர்த்தல்.

விண்மே லமரர் விரும்பம ராவதி வெள்ளமுந்நீர்
மண்மே லடைக்தன்ன வாழ்க்கைய தானது வாணன்றஞ்சை
பண்மே லளிமுரல் குங்குமத் தோளவர் பங்கயம்போல்
கண்மே லருள்பெற்று வாழ்மட மாதர் கடிமனையே.

இ - ள். வாணன் தஞ்சைமாநகரின்மேலே வண்டு பண்ணைமுரலப்பட்ட குங்குமமாலையணிந்த தோளையுடையவரது பங்கயம்போன்றகண்ணினிடத்தருளைப்பெற்று வாழப்பட்ட மடமாதர் மணமனையாயினது விண்ணுலகில்அமரர்விரும்பும்அமராவதிவெள்ளமாகிய கடல்சூழ்ந்த மண்ணுலகின்மேல் வந்தடைந்தாலொத்த வாழ்க்கையதானது. எ - று.

அமராவதி - இந்திரபுரம். முந்நீர் - கடல். 'அளிபண்' ணைமாறுக. முரலுதல்-ஒலித்தல். கடி-மணம். (௩௭௫)

செவிலி நற்றாய்க்குஇருவர்காதலையு மறிவித்தல்.

(இது வெளிப்படை.)

கனையகத் தல்கிய காண்மல ரோதி நயந்துறையும்
மனையகத் தல்லிடை வைகுத லாற்றஞ்சை வாணனென்னோர்
வினையகத் தல்குதல் செல்லுவ ரேனுமவ் வேந்தர்பொற்றோர்
முனையகத் தல்கல்செல் லாதொரு நாளு முகிழ்நகையே.

இ - ள். கள்ளுள்ளே தங்கிய முறுக்கவிழ்மலரையணிந்த கூந்தலாள் விரும்பியுறையும் மனையகத்து இராக்காலத்தில் தங்குதலாலாகின் தஞ்சைவாணன் ஒன்னார் போர்த்தொழிலிடத்துத் தங்குதலால் செல்லுவரேனும் அத்தலைவர்பொற்றேர் ஒருநாளும் படையகத்துத்தங்குதல் செல்லாது.

எனவே,—இரவின்கண் மனையிடத்துத் தங்குதலல்லது மற்றோரிடத்துத் தங்குதலில்லையென்று கூறியவாறாயிற்று.

கனை-கள். அகம்-உள். அல்குதல்-தங்குதல். நாண்மலரோதி-ஆகுபெயர். நயந்து-விரும்பி. அல்-இரவு. வைகுதல்-தங்குதல். முனை-படை, 'செல்லுவரேனும்' என்னும் உம்மையாற்செல்லாரென்பது தோன்றிநின்றது. மலர் நகைமடவார்க்கியல்பென்றதனால் 'முகிழ்நகை' யெனக்கூறினார். முன்னம் வறிதுநகை தோற்றற்கும் இவ்வாறே முகிழ்நகைதோன்றியதென் றுணர்க.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப்புகழ்தல் கிழவோன் மகிழ்ச்சி; தலைவனைப் பாங்கிவாழ்த்தல்முதல்செவிலிக் கில்வாழ்க்கை நன்றறைத லீறாகிய

வாற்றனுள் பெருமகளுரைத்தல் கிழத்திமகிழ்ச்சி; அல்லனவைந்தும் பாங்கி மகிழ்ச்சி; செவிலிநற்றாய்க்குத் தலைமகள் கற்பியலுரைத்தல் மூன்றுஞ்செவிலி மகிழ்ச்சி யெனக்கொள்க. (௩௭௬)

இல்வாழ்க்கை முற்றிற்று.

பரத்தையிற்பிரிவு.

இது தலைவன் பரத்தைமேற் காதலாய்த் தலைவியைப்பிரிந்து பரத்தையர் சேரியிற்போதல். பரத்தையிற்பிரிவென் றோதவே *"பொதுநலத்தார் புன்னலந்தோயார்-மதிநலத்தின் மாண்டவறிவினவர்."—என்பதனால்தலைவனறிவிலனும், தலைவியிடத்தன்புமிலனும், பெருமையுமிலனும், பட்டியுமாமெனின் அன்றன்று. அரசுரிமையனுதலின் அரசுரிமைக்குப் பரத்தையரினும் வரைதற்குரியராய்த் தொன்றுதொட்டு நடக்கு முறைமையராயும், வரையாத வுரிமையாய் சேரியின்க ணுறைவாருமாய இவரும் பிறந்த ஞான்றுதொட்டு இவர்க்கென விரித்திருக்கப்படுதலானும், அவரை நீக்குதல் தகுதியன்மையானும், பரத்தையிற் பிரிதல் குற்றமன்றெனக்கொள்க. அன்றியும், காலைக்கட்டன்கழித்தலும், உலகத்திலிருந்து நாடுகாவற்றொழில்செய்தலும், விருந்துடனடிசில்கைதொடலும், நாவலரோடுகல்விபயிற்றலும், ஆடல்பாடல்களிற்களித்தலும், மடவாரோடு கூடலும், துயிறலும், துயிலுணர்ந்து தேவர்ப்பராவலுமாகிய காலவரைபனையெட்டினுள், ஆடல்பாடல் ஒன்றுதலானும், அதற்குரியர் பரத்தைய ராதலானும், அதற்குரியகாலத்தில் அவரிடத்தில் மனம் செல்லுதலியல்பாதலானும், பரத்தையிற்பிரிதலாற் குற்றமின்றெனக்கொள்க. ஆயின், பரத்தையர்சேரியில் செல்லுமாறென்னையெனின், அவர் பலரோடும் விளையாடற்பொருட்டும், அவருடன் புணர்தற்குரியரைப் புணர்தற் பொருட்டும் பரத்தையர் சேரியிற் செல்லுமென்றுணர்க.

காதலன்பிரிவுழிக்கண்டோர்புலவிக்
கேதுவிதாமவ்விறைவிக்கென்றல்.

(இது வெளிப்படை.)

மாறையர் காவலன் வாணன்றென் றஞ்சையில் வாணுதற்கிவ்
வாறையர் காரண மாகுமென்றே கொங்கை யானையுடன்
சேறையர் வீதிய ரிப்பறை யார்ப்பத் தயங்குகுழல்
சூறையர் சூறைகொள் வான்வய லூரனைச் சூழ்ந்தனரே.

(இ - ள்,) விளங்கும் குழலையுடைய பரத்தையரறிவைக் கொள்ளை கொள்ளும் பொருட்டாகக் கொங்கையாகிய யானையுடன் திருவிழாச்செய்

---

* திருக்குறள், சே. ௯௧௫.

யும்வீதியில் வண்டாகியபறைகள் ஆரவாரிக்க வயலூரானைச்சூழ்ந்தனர்; ஆத தலால், மாறையர் காவலனாகிய வாணன் தென்தஞ்சையிலிருக்கும் வானு தற்கு இம்முறைமை புலவி செய்தற்குக் காரணமாம். எ - று.

இவ்வாறு-இம்முறைமை. அயர்தலிரண்டும்செய்தல். சாறு-விழா. அரி- வண்டு. சூறையர்-பரத்தையர். சூறை-கொள்ளை. புலவியும் அறிவும் அவாய் நிலையான்வந்தன. (௩௭௭)

தனித்துழியிறைவிதுனித்தழுதிரங்கல்.

(இது வெளிப்படை.) துனிதல்-துன்பமுறல்.

வன்போ தணிதொங்கல் வாணன்றென் மாறை மகிழ்நர்நம்மேல்
அன்போடு நன்னெஞ் சறிவறை போக வழலுள்வெந்த
பொன்போ னிறங்கொண் டிரவுங் கண்ணீரும் புலர்வதுபார்த்
தென்போ லவரிங்ங னேயிமை யாம விருப்பவரே.

இ - ள். போதுகளாற் கட்டியமாலையணிந்த வாணன் தென்மாறையி லிருக்கும் வண்மையாகிய மகிழ்நர் நம்மேல்வைத்த அன்புடனே அவ்வன் பிருக்கும் நெஞ்சறிவு கீழ்போக அழலுள்வெந்த பொன்போன்ற நிறத்தைக் கொண்டு இரவும் கண்ணீரும் எப்போதுபுலருமென்றுபுலர்வதுபார்த்துஇவ் விடத்தில் என்னைப்போல் உறக்கமின்றி இமையாம லிருப்பவர்யார்? எ-று.

'தொங்கலணி' எனவும், 'வணமகிழ்நர்' எனவும், 'இங்ஙனென்போல்' எனவும் இயையும். தொங்கல்-மாலை. மகிழ்நர்-கணவர். அறைபோதல்-கீழ் போதல். அழல் - நெருப்பு. (௩௭௮)

ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினுதல்.

ஈங்கிதுவென்னெனப் பாங்கிவினுதல் எ - து. மற்றைநாட்காலையில்வந்த பாங்கி தலைவியை நோக்கி நீ அழுதுகொண்டிருத்தற்குக் காரணம் என் னென்று வினுதல்.

எம்மா திரமும் புரவலர் தேடி யிரங்துழல்வோர்
தம்மா துயரந் தணித்தருள் வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
நம்மாவி யன்னவர் நாடொறு நாடொறு நல்கவுநீ
விம்மா வருந்துவ தென்பிரிந் தாரின் விளங்கிழையே.

இ - ள். விளங்கிழாய்! எத்திக்கினுங் கொடைப்போரைத் தேடியிரந்து வருந்துவோர் தம்முடைய பெரியதுயரைத் தவிர்த்தருளப்பட்ட வாணன் தமிழ்த் தஞ்சையில் வாழும் நமதாவிபோன்றவர் நாடோறும் நாடோறும் இன்பமளிக்கவும் நீவிம்முதனுற்றுப்பிரிந்தாரைப்போல் வருந்துவதென்?

மாதிரம் - திக்கு. புரவலர் - கொடுப்போர். உழல்வோர்-வருந்துவோர். தணித்தல்-ஆற்றல். நல்கல்-அளித்தல். விம்மா என்பது வினையெச்சம். இன் - உவமவுருபு. எடுத்துக்கோடற்கண்ணே அகப்பொருளென்பதற்கு இன்பப்பொருள்என்று பொருள்கூறியவர் இவ்வாறு துன்பமுறுதலைக்கூறிய தென்னையெனின், புணர்தல்பிரிதலிருத்தலிரங்கலூடலென்பன இன்பத்திற் குறுப்பாகலின் இவ்வைந்தினிலொன்று நீங்கினும் அவ்வின்பத்திற் குறுப்புக்குறையாம், அஃதென்னையெனின், புணர்தலே யின்பமென்றும் ஏனைய துன்பமென்றும் கூறுகின்றுழி, பிரியாது புணர்ந்துழி வெறுப்படையும், பிரிந்துழி துன்பமுற்றிலரேல் அவரறிவிலாராம். இருத்தலும் ஊடலும் இவ்வாறேகொள்க. ஆதலால், துன்பமுறுவிடின் இன்பக்குறைபாடேயெனக் கொள்க. (௩௭௧)

இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தல்.

இறைமகன் ... ...' இறைமகளுணர்த்தல் எ - து. தலைவன்தன்னிடத்தொழுகுமொழுக்கமின்று பரத்தையரிடத் தொழுகுகின்றானென்று தலைவி பாங்கிக்குக்கூறல்.

'புறத்தொழுக்கு' என்பதற்குப்பொருள் பரத்தையரிடத் தொழுகுமொழுக்கம் என்று பொருள் கொண்டவாறென்னையெனின், வடநூலார் புறகுணப்பாமென்று கூறுவராதலால் பரத்தையரொன்னுஞ் சொற்குப் புறமுடையவரொன்னும் பொருள்கூறிநின்றவாறுணர்க. புறமுடையரென்பதென்னையெனின், இவரின்பம் இன்பமன்றென்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் வரைவின்மகளிர்என்னும்அதிகாரத்தால் இன்பத்திற்குப் புறம் இவரின்பமென்று கூறியவாற்றானுணர்க. *"இருமனப்பெண்டிருங் கள்ளுங்கவறுந்-திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்பதனானுமுணர்க.

தாராக நல்கினர் காரிகையாய் தஞ்சைவாணன் றன்னைச்
சேரா தவரொன்னத் தீவினையேனை யச்செங்கண் வன்கட்
காரா கழனிக் கரும்பினைஞ் சாயக் கதழ்ந்துசெந்நெல்
ஆரா தயலிற் பஞ்சாயாரு ழூர ரயலவர்க்கே.

இ - ள். அழகையுடையாய்! தஞ்சைவாணனைச் சேராதவர்போலத் தீவினையுடைய யான்வருந்தச் சிவந்தகண்ணையும் தறுகண்மையுமுடைய எருமை கழனியிடத்துக் கரும்புக்கூட்டஞ் சாயமிதித்து விரைந்துபோய்ச் செந்நெல்லையுமாராது வயல்வரம்புகடந்துஅயலிலிருக்கும் கோரையயருந்தும் ஊரையுடையவர் அயலாராகிய பரத்தையர்க்குத் தார்பொருந்திய தமது மார்பைக்கொடுத்தனர். எ - று.

எனவே,—கரும்புபோன்ற குலக்கிழத்தியும் செந்நெல்போன்றதானும் வருந்துமனத்தில்லென்னுது வரம்புகடந்துஅயலிலிருக்கும் கோரைபோன்ற

---

* திருக்குறள், செ. ௯௨௦.

பரத்தையரைக் கூடினனென உள்ளுறையுவமங் கொள்ளக்கிடந்தவாறு காண்க. தார்-மாலை. ஆகம்-மார்பு. வன்கண்-தறுகண்மை. காரா - எருமை. *“பெற்றமுமெருமையுமரையுமாவே.” என்பதனானுணர்க. கதழ்ந்து-விரைந்து. பஞ்சாய் - கோரை. (௩௮௦)

தலைவியைப்பாங்கிகழறல்.

(இது வெளிப்படை.) கழறல் - இடித்துக்கூறல்,

புனையலங் காரங் கற்பியல் போற்றியும் போற்றருஞ்சீர்
மனையறம் பாலித்தும் வாழ்வதல்லாற் றஞ்சை வாணனன்னா
டனையவண் டார்குழ லாரணங் கேநமக் கன்பரிக்காள்
இனையரென் றார்வமில் லாவுரை யாட லியல்பல்லவே.

இ - ள். தஞ்சைவாணனன்னாடுபோன்றவண்டார்ந்த குழலையுடைய ஆரணங்குபோல்வாய்! அலங்கரிக்கும் அலங்காரம் நங்கற்பிலக்கணமே யென்று கற்பிலக்கணத்தை வழுவாமற்காத்தும், துதித்தற்கரிதாகிய சிறப்பையுடைய இல்லறத்தை யுண்டாக்கியும் அவர்வாழ்வதேயல்லது இப்போது தம்மிடத்தன்பையுடையவர் இத்தன்மையரென்று விருப்பமில்லாததாக அவர் புறத்தொழுக்கைக்கூறுதல் நமக்கு முறைமையன்று. எ - று.

புனைதல் - அலங்கரித்தல். போற்றல் - காத்தல். இயல் - இலக்கணம். மனையறம் - இல்லறம். இனையர் - இத்தன்மையர். ஆர்வம் - விருப்பம். †“அன்பீனுமார்வமுடைமை” என்பதனாற்கொள்க. (௩௮௧)

தலைவிசெவ்வணியணிந்துசேடியைவிடுப்புழி அவ்வணியுழையர்கண்டழுங்கிக்கூறல்.

செவ்வணி ... ... கண்டழுங்கிக்கூறல் எ - து. தலைவிபூத்தகாலை மூன்றுநாள்போக்கி நாலாநாள்நீராடியபின் செம்பூச்சூடி செவ்வாடையுடுத்துச் செஞ்சாந்துபூசிச் சேடியைவிடுக்க பரத்தையர் சேரியிலிருக்குங்கால் அவ்வலங்காரத்தை அயல்மனையிலுள்ளார் கண்டிரங்கிக்கூறல்.

வேளாண் மரபு விளக்கிய வாணன்மின் னுங்கழல்சூழ்
தாளான் வளங்கெழு தஞ்சையன் னீர்சங்கந் தந்தநன்னீர்
தோளா மணியன்ன தொல்குல வோடையிற் றோன்றியபூ
வாளா வலர்தொடப் பார்க்கெங்ங னேவந்து வாய்த்ததுவே.

இ - ள். வேளாண்குலத்தை விளங்கச்செய்தவாணனென்னும் ஒளியார்ந்த கழல்சூழ்ந்த தாளையுடையவனது வளம்பொருந்திய தஞ்சையையொப்பீர்! சங்கம் ஈனப்பட்ட நல்ல நீர்மையையுடையதுளைப்படாதமுத்தம்

* தொல். பொருள். மரபியல், சூ. ௯௦. † திருக்குறள், சே. ௭௪.

போன்று தோன்றுதொட்டுவழுவில்லாது வரப்பட்ட குலமாகிய வேளைட்யிற்றோன்றியபூ வறிதே அலர்தொடுப்பார்க்கு எவ்விடத்திலே யிருந்து வாய்த்தது. எ - று.

பூவின்றி அலர்தொடுப்பார்க்கு ஒருபூவந்து வாய்க்கில் எவ்வாறலர் தொடாரென்றவாறாயிற்று. மரபு-குலம். மின்-ஒளி. தோளாமணி-தொளைபடாமுத்தம். பூ-திங்கடோறும்வரும் மாதர்சூதகம். வாளா-சும்மா. 'சங்கந் தந்தநன்னீர்'என்பதனை 'மலர்ச்சந்தநன்னீர்'என்று பாடமோதி வெண்மலர் போன்ற அழகையுடையமுத்தமென்று பொருள்கூறுவாருமுளர். இவ்வாறு செவ்வணியணிந்து சேடியைவிடுத்தல் உலகின்கண் வழக்கமின்றெனின் புலவர் நாட்டப்பட்ட செய்யுள்வழக்கமெனக்கொள்க. (௩௪௨)

பரத்தையர்கண்டுபழித்தல்.

பரத்தையர்கண்டுபழித்தல் எ - து. அச்சேரியிற்போய சேடியைப் பரத்தையர்கண்டு பழித்துக்கூறல்.

படியொன்று சாலி யனையவர் சேரிப் படர்பவளக்
கொடியொன்று நீல மலர்ந்தது காட்டக் கொடியவெம்போர்
வடியொன்று கூரிலை வேல்வல்ல வாணன்றென் மாறையிற்பொற்
றொடியொன்று தோண்மட வார்சேரி வாய்வந்து தோன்றியதே.

இ - ள். புவியிற்பொருந்திய கற்போன்றவர்சேரியினின்றும் நடந்து வந்த பவளக்கொடியொன்று நீலம்பூத்ததைக் காட்டும்பொருட்டுக் கொடிய வெவ்விய போரைச்செய்யப்பட்ட வடித்தற்றொழில்பொருந்திய கூரிய இலைபோன்ற வேற்றொழில்வல்ல வாணன்தென்மாறையில் பொற்றொடி யணிந்த தோளையுடைய மடவார் சேரியிடத்துவந்து தோன்றிற்று. எ - று.

படி-புவி. சாலி யனையவர் - இற்கிழத்தியாகிய தலைவி. படர்தல்-அச் சேரியினின்றும் இச்சேரியில் வருதல், நீலம்-பொய்; பவளக்கொடி நீலமாதல் பொய்யென்பதுபற்றிக்கூறினர்: எனவே,—தலைவிபொய்யடையாளஞ் செய்தனுப்பியதெனப் பழித்துக்கூறியவாறு காண்க. வடி - வடித்தல். அகவணியாகிய நாணம்முதலிய குணங்களில்லாமையான் புறவணியுடையா ரென்பதுதோன்ற 'பொற்றொடியொன்று தோண்மடவார்'என்று கூறினர்.

பரத்தையருலகியல்நோக்கிவிடுத்தலின் தலைவன்வரவுகண்டு வாவிலக்கணமொழிதல்.

பரத்தைய ... ... மொழிதல் எ - து. தலைவி நீராடியஞான்று பரத்தையர் தங்கள் சேரியில் தலைவனிருத்தல் உலகமுறைமைக்கு இயலாதென்று விடுத்தலின், தலைவன்வருதலைக்கண்டுவந்து தாதிகள் பாங்கிக்குமொழிதல்.

வாருந்து பச்சிள நீர்முலை யார்மதன் வாணன்றஞ்சை
யாருந் தொழத்தகு மெம்பெரு மாட்டிதன் னேவலினால்
சேரும் பரத்தையர் சேரியி லேசென்ற சேடியைக்கண்
டேருந் திரைப்புன லூரன்வந் தானின் றுலகியற்கே.

இ - ள். கட்டியகச்சைப் பூரித்துத்தள்ளப்பட்ட பசிய இளநீர்போன்ற முலையார்க்கு மதனையொத்த வாணன் தஞ்சையில் கற்பினால் யாவரும் தொழத்தகும் எம்பெருமாட்டி தனதேவலினால் முன் தலைவன்போய்ச் சேரும் பரத்தையருடையசேரியிலேசென்ற சேடியைக்கண்டு ஏரப்பட்ட அலையையுடைய புனல்சூழ்ந்தவூரன் இன்று உலகியற்குவந்தனன். எ - று.

வார் - கச்சு. திரை - அலை. புனல் - நீர். உலகியல் - தலைவி நீராடிய ஞான்று தலைவன் பரத்தையிற்பிரியாமை தருமநூலியல்பு. (௩௮௪)

வரவுணர்பாங்கி யரிவைக்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

தள்ளா வளவயல் சூழ்தஞ்சை வாணன் றரியலர்போல்
உள்ளா துனைப்பண் டகன்றன ராயினு முள்ளியிப்போ
தெள்ளாது வந்துன் கடையினின் றார்நம் மிறைவர்குற்றங்
கொள்ளா தெதிர்கொள்வ தேகுண மாவது கோமளமே.

இ - ள். நம்மிறைவர் தள்ளாத வளத்தையுடைய வயல்சூழ்ந்த தஞ்சைவாணன் தரியலர்போல் உன்னைநினையாது முன்பு சென்றனராயினும், இப்போது நினைத்திகழாதுவந்து உன்வாசலில்நின்றனர்; அவர்செய்தகுற்றத்தை மனத்திற்கொள்ளாமல் எதிர்கொள்வதே குணமாவது. எ - று.

தள்ளா - நீங்கா. உள்ளாது - நினையாது. பண்டு - முன்னம். உள்ளி - நினைந்து. கடை - கடைவாசல். கோமளம் - இளமையழகு. 'உன்னையுள்ளாது' எனவும் 'இப்போதுள்ளி' எனவும் இயையும். (௩௮௫)

தலைவனைத்தலைவி யெதிர்கொண்டுபணிதல்.

(இது வெளிப்படை.)

மருவிற் பெருநல மன்னுவதாந் தஞ்சை வாணன்வெற்பர்
ஒருவிற் பசலை யுருக்குவ தாநமக் கூடலெவ்வா
றிருவிற் புருவ விளங்கொடியே யெய்து மெய்தலில்லாத்
திருவிற் புனைநறுந் தார்வரை மார்பர் திருமுனின்றே.

இ - ள். இரண்டு விற்போன்ற புருவத்தையுடைய இளங்கொடியே! தஞ்சைவாணன்வெற்பர் நம்மைமருவினராயின் பேரழகு நிலைபெறுவதாம்; அவர் நீங்கின் பசலைநிறமுருக்குவதாம்; இத்தன்மையாகிய நமக்கு ஊடலெவ்

வாறு! விடுதலில்லாத் திருவைப்போல் அணியப்பட்ட நறியதாரையணிந்த வரைபோன்ற மார்பர் திருமுன்னின்று பணிதும். எ - று.

நலம்-அழகு. ஒருவுதல்-நீங்குதல். எய்தும்-பணிதும். எய்தல்-விடுதல். இன் உருபு ஒப்புப்பொருண்மைக்கண்வந்தது. புனைதல் - அணிதல். திருமுன்-தருகி வழக்கு, எய்தும் என்றது பணிதுமென்னும் பொருள்கொள்ளுமோவெனின், தேவர்கூறிய கடவுள்வாழ்த்தில் † "தேவாதிதேவனவன் சேவடி சேர்துமன்றே." என்பதனில் சேர்தும் என்பதற்கு வணங்குதும் என நச்சினார்க்கினியா ருரையெழுதினார். சேர்தும் என்பதும் எய்தும் என்பதும் ஒருபொருட்கிளவியாதலால் எய்தும் என்பதற்குப் பணிதும் எனவே பொருள்கொள்க. (௩அசு)

புணர்ச்சியின்மகிழ்தல்.

(இது வெளிப்படை.)

மன்னவர் காய நெடுங்கடல் வாணன்றென் மாறையன்னாள்
தொன்னலம் வார்முலை மத்தந் தழீஇத்தடந் தோளிணையாம்
பன்னக நாணிற் கடைந்திதழ் வார்திரைப் பட்டநன்னீர்
இன்னமிழ் தார்ந்திமை யோரமை யாவின்ப மெய்தினமே.

இ - ள். தலைவர் காதலாகிய நெடுங்கடலில் வாணன்றென்மாறையன்னாளது அழகுபழகிய வார்முலையாகிய மத்தைத்தழுவிய பெரிய தோளிணையாகிய பன்னகநாணினாற்கடைந்து, இதழின்கண் நெடிய அலையாலுண்டாகப் பட்ட நன்னீராகிய இனியவமுதத்தையார்ந்து இமையோரது தெவிட்டாத வின்பத்தை யெய்தினர். எ - று.

நலம்-அழகு. தொல்-பழமை. மாறிப்பொருள்கொள்க. மத்தம்-மத்து. பன்னகம் - பாம்பு. திரை-அலை, அமையா-தெவிட்டா. கூற்று கவிக்கூற்று. களவிற்புணர்ச்சி யெல்லாம் தலைவன்கூற்றாய் நிகழ்த்தி இப்புணர்ச்சி கவிக்கூற்றாயின தென்னையெனின், தலைவி நாணுடையளாதலால் தலைவி செயலின்றித் தலைவன் செயலாய் முடிதலின் தலைவன்கூற்றாய் நிகழ்ந்தது; கற்பியல் அவ்வாறன்றி இருவர்செயலுமொத்துநிகழ்தலின் இருவர்கூற்று ஒரு கவிக்கண் கூறலாகாமையின் கவிக்கூற்றாய் நிகழ்ந்தவாறு காண்க. (௩அஎ)

வெள்ளணியணிந்துவிடுத்துழித்தலைமகன்வாயில்வேண்டல்.

வெள்ளணி ... ... வாயில்வேண்டல் எ - து. தலைவி புதல்வனைப்பயந்து நெய்யாடிய செய்திக்கு அடையாளமாகி வெள்ளாடை முதலியன வணிந்து சேடியைவிடுப்புழி அச்சேடியை வாயிலாகத் தலைவன் வேண்டிக்கூறல்.

---

† சிந்தாமணி, நாமகளிலம்பகம், வாழ்த்து, செ. க.

என்பாற் குறையை நினைந்து மறுதெதிர் கொள்ளவல்லே
தன்பாற் புலவி தணிசென்று நீதஞ்சை வாணன்வையம்
அன்பாற் பரவும் புகழுடை யானரு ளேயனையாய்
உன்பாற் புலவி யுறுள்வண்ண வார்குழ லொண்ணுதலே.

இ - ள். வையம் அன்பாற்பரவும்புகழுடையானாகிய தஞ்சைவாணனதருளைப்போல்வாய்! அழகுபொருந்திய வார்ந்தகுழலையுடையவொண்ணுதலாள் நின்னிடத்தில் புலவியையுறுள்; ஆதலால், என்னிடத்தில் குறையை நினைந்து மறுதவண்ணம் எதிர்கொள்ள நீவிரைந்துசென்று அவடன்னிடத்துப் புலவியை யாறச்செய்வாய். எ - று.

வல்-விரைவு. *"செல்லாமையுண்டேலெனக்குரைமற்றுநின் வல்வரவு வாழ்வார்க்குரை." என்பதனானறிக. புலவி-ஊடல். வையம்-உலகு. பரவுதல்-துதித்தல். எண்ணுதல்-ஆகுபெயர். (௩௮௮)

தலைவிநெய்யாடியதிகுளைசாற்றல்.

தலைவிநெய்யாடியதிகுளைசாற்றல் எ - து. தலைவி புதல்வனைப்பயந்து நெய்யாடியதனைப்பாங்கி தலைவற்குச்சொல்லல்.

மலர்புரை யேர்கொண்ட வாட்கணெங் கோமங்கை வாணன்றஞ்சைப்
பலர்புகழ் பாலற் பயந்துநெய் யாடினள் பாங்கெவர்க்கும்
மலர்புரை நீடொளி யாடியுட் பாவையன் னாட்குளநீர்
புலர்புன லூரவென் னோதிரு வுள்ளமிப் போதுனக்கே.

இ - ள். மலரை யொப்பா யழகுகொண்ட ஒளிபொருந்திய கண்ணையுடைய எமக்கரசாகிய மங்கை வாணன்றஞ்சையிற் பலரும்புகழப்பட்ட பாலனைப்பெற்று நெய்யாடினள்; பாங்கியவெவர்க்கும் மலரையொப்பாய் நீண்டவொளியையுடைய கண்ணாடியுட்பாவைபோன்றாளிடத்து உள்ளன்பு புலர்ந்தபுனலூர! இப்போதுனக்குத் திருவுள்ள மியாதோ! எ - று.

பலர்புகழ் என்புழிச் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. பயந்து - ஈன்று. பாங்கு-பாங்கியர். "பாங்கிலன்றமியாளிடந்தலைப்படலும்," என்பதனானுணர்க. ஆடி - கண்ணாடி. அன்னாட்கு என்புழி வேற்றுமைமயக்கம். உளநீர் - உள்ளன்பு, ஓகாரம் - ஐயம்; என்னை,—பரத்தையர் சேரிக்குச் செல்லத் திருவுளமோ, ஈண்டுறையத் திருவுள்ளமோவென ஐயந்தருதலானெனக்கொள்க. (௩௮௯)

---

* திருக்குறள், செ. ௧௧௫௧.

தலைவன்தன்மனத்துவகைகூறல்.

(இது வெளிப்படை.)

மையணி வேல்விழி வாணுதல் கூர்ந்தது வாணன்றஞ்சைக்
கொய்யணி நாண்மலர்க் கொம்பரன் னாள்குழ விப்பயந்து
நெய்யணி மேனி யிலையவி பூண்ட நிலையறிந்தே
கையணி வால்வளை யைக்கண்ட நாளினுங் காதன்மையே.

இ - ள். மையணி வேல்போன்ற விழியையும் வாணுதலையு முடை யாய்! வாணன்தஞ்சையிற் கொய்யப்பட்ட அழகாகிய நாண்மலரையுடைய கொம்புபோன்றவள் புதல்வனைப்பெற்று நெய்யணிந்த மேனியில் வெண் சிறு கடுகுபூண்ட நிலைமையறிந்து கையிலணிந்த ஒள்ளியவளையினையுடை யாளைக்கண்ட நாளினும் காதற் றன்மைமிகுந்தது. எ - று.

வேல்விழி வாணுதல்-அன்மொழித்தொகை, கூர்தல்-மிகுதல். அணி-அழகு. நாண்மலர்-முறுக்கவிழ்மலர், குழவி-மகவு. *"குழவியுமகவுமா யிரண் டல்லவை-கிழவவல்லமக்கட்கண்ணே." என்பதனானுணர்க. பயந்து-பெற்று. ஐயவி - வெண்சிறுகடுகு, †"நெய்யோடையவியப்பியைதுணைத்து." என் பதனாலுணர்க, குழவி என்புழி இரண்டனுருபுதொக்கது. வால்வளை-ஆகு பெயர். காதன்மை-ஆசைத்தன்மை. வாணுதல்-அண்மைவிளி. (௩௯௦)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

(இது வெளிப்படை.)

ஏரார் புதல்வன் பிறந்தனன் வாழிய வென்னுமுன்னே
வாரார் வுளமனை வந்துநின் றார்கங்குல் வாணன்றஞ்சை
நீராவி நீலநெடுங்கண் மின்னே நின்னை நீப்பதல்லாற்
றேரா தொழிகுவ ரோபெரி யோர்தஞ் சிறுவனையே.

இ - ள். நெடுங்காலம்வாழ்க! அழகார்ந்த புதல்வன் பிறந்தனனென் றுசொல்வதற்குமுன்னே தருந்தகுதியில்லார் கங்குலிடத்து வளவிய நம் மனையில்வந்துநின்றனர், வாணன்றஞ்சையில் நீர்பொருந்திய வாவியிற் பூத்த நீலம்போன்ற நெடியகண்ணையுடைய மின்னே! நின்னைப் பிரிவதே யல்லது பெரியர் தஞ்சிறுவனைத் தேர்ந்தறியாது விடுவரோ. எ - று.

ஏர்-அழகு. வாழிய-நெடுங்காலம்பற்றியசொல்: என்னை,— ‡"வாழிய வென்னுஞ்சேயென்கிளவி" என்பதனானுணர்க. ஆவி - வாவி. மின்-ஆகு பெயர். நீத்தல்-பிரிதல். தேர்தல்-பிறந்தகாலத்தை யாராய்ந்தறிதல். (௩௯௧)

---

* தொல். பொருள். மரபியல். சூ. ௨௩.
† திருமுருகாற்றுப்படை, பழமுதிர்சோலை, வரி. ௨௨௮.
‡ தொல், எழு, உயிர்மயங்கியல், சூ. ௧௦.

தலைவியுணர்ந்துதலைவனோடுபுலத்தல்.

(இது வெளிப்படை.)

வயங்கே ழுலகும் புரக்கின்ற வாணன்றென் மாறையன்ன
நயங்கேழ் பெருவள நல்குநல் லூர நயந்துநண்ணி
முயங்கேல் சிறுவரைப் பயந்தவென் மேனியின் முத்துவட்டம்
தயங்கே ரகமுழு தும்பழு தாமது தானினக்கே.

இ - ள். விளக்கப்பட்ட ஏழுலகத்தையுங் காக்கின்ற வாணன் தென்மாறையன்ன இன்பமும் ஒளியும் பெரியவளமும் நல்கப்பட்ட நல்லூரையுடையானே! சிறுவரைப்பயந்த என்மேனியைவிரும்பிப் பொருந்தி முயங்கற்க; முயங்கியது தான் நினக்கின்பமாகிய பரத்தையர் முலைமேலணிந்த முத்துவடம் தயங்கப்பட்ட அழகுபொருந்திய நெஞ்சமுழுதும் பழுதாம். எ - று.

வயங்கல்-விளங்கல். புரத்தல்-காத்தல். நயம்-இன்பம். கேழ்-ஒளி. தயங்கல்-விளங்கல். ஏர்-அழகு. அகம்-நெஞ்சு. 'மேனிநயந்து' என இயையும். ()

தலைவிபாணனைமறுத்தல்.

(இது வெளிப்படை.)

தலையா கியதன்மை யூரற்கு வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
மலையா கியமதில் வையைநன் னாட்டெங்கை மான்படுக்கும்
கலையாகு நின்னிசைக் கண்ணிகொண் டேதிரி கன்றுதின்னிப்
புலையா கடக்கவெம் மிற்போக போக புறங்கடையே.

இ - ள். தலைமைத் தன்மையாகிய ஊரற்கு வாணனது தமிழ்த்தஞ்சையைச் சூழ்ந்த மலையாகிய மதிலையுடைய வையைசூழ்ந்த நாட்டின் எங்கையாகிய மானைச்சிக்கவைக்கும் மானுக்கினமாகிய கலைபோன்ற நின்னிசையாகிய கண்ணிகொண்டு திரியப்பட்ட கன்றுதின்னியென்னும் புலையா எம்மில்லினின்றுங்கடக்கப் புறங்கடையிற்போக போகவென்று கல்லெறிந்தனள். எ - று.

எங்கை-என்தங்கை. கண்ணி-மான்படுக்குங்கண்ணி. கலை-இசைநூல். கன்றுதின்னி இகழ்ச்சிப்பெயர். 'போகபோக' என்பது வெறுப்பின்கண் வந்தஅடுக்கு. மேற்செய்யுளில்கல்லெறிந்தாயென்று பாணன்தலைவியொடுங் கூறியவாறு, இச்செய்யுளில் கல்லெறிந்தனளென்பது வருவிக்கப்பட்டது.

வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல்.

வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல் எ - து. கல்லெறிந்த தலைவியுடன் பாணன்கூறல்.

நினக்கே தருநின் னெடும்புன லூரனு நீயுமவன்
தனக்கே தருவை தமிழ்த்தஞ்சை வாணன் றடங்கிரிசூழ்
புனக்கே கயமன்ன நின்னடி போற்றிப் புகன்றகன்றும்
எனக்கே தருமிகை யாலெம் பிராட்டி யெறிந்தகல்லே.

இ - ள். எம்பிராட்டி! நின்னுடையகணவனாகிய நெடும்புனலூரனும் நினக்கேதருவன், நீயும் அவன்றனக்கேதருவை, யான்செய்தகுற்றத்தால் நீ யெறிந்தகல் தமிழ்த்தஞ்சை வாணனது விசாலமாகிய மலைசூழ்ந்த புனத்திலிருக்கும் மயில்போன்ற நின்னுடைய அடியைத்துதித்துத் தலைவன் வரவைக்கூறிய அதனால் மனங்கன்றும் எனக்கேதரும். எ - று.

ஏகாரம் மூன்றும் பிரிநிலை; ஆடவரினும் மடவாரினும் பாணரினும் பிரித்து வாங்குதலின். தடங்கிரி - பெரியமலை. கேகயம் - மயில். கன்றல்- வெம்புதல். மிகை - குற்றம். (௩௬௪)

விறலிவாயின்மறுத்தல்.

(இது வெளிப்படை.)

வண்புன லூர்வையை சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
கண்புன லூருமென் காதல்கண் டேநின் கடைத்தலைக்கே
தண்புன லூரன்வந் தானென்று சாற்றினை தானமுறப்
பண்புன லூர்களெல் லாம்பாடி யேற்றுண்ணும் பாண்மகளே.

இ - ள். ஈவுபெறப் புனல்சூழ்ந்த ஊர்கடோறும் பண்ணைப்பாடி இரந்துண்ணும் பாண்மகளே! வளவியபுனல்செல்லும் வையையாறுசூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தலர்போல் கண்ணிடத்துப் புனலூர்ந்துவரும் என்காதலைக்கண்டு நின்கடைத்தலையின்கண் தண்ணியபுனலூரன் வந்தனனென்று சொல்லினை, இச்சொற்கு மனம்பொறுத்தேன் சொல்லாய். எ - று.

ஊர்தல் - செல்லுதல். உளர்தல்-பெருகுதல். ஊரன்-மருதநிலத்துத் தலைவன். தானம்-ஈவு. (௩௬௫)

விருந்தொடுவந்துழிப்பொறுத்தல்கண்டிறையோன்மகிழ்தல்.

(இது வெளிப்படை.)

புரவே யெதிர்ந்த நமக்கு விருந்தின்று போலவென்றும்
இரவே புணர்த்தநம் மாதவம் வாழிய வாணன்றஞ்சைக்
குரவேய் கருமுகிற் கொந்தள பாரங் குரும்பைகொங்கை
அரவேய் நுடங்கிடை யாள்விழி யூர்சிவப் பாற்றுதற்கே.

இ - ள். வாணன்தஞ்சையிலிருக்கும் குரவலர்மாலைசூடிய கருமுகில் போன்ற அளகபாரத்தையும், குரும்பைபோன்ற கொங்கைப்பாரத்தையும்

தாங்கவாற்ருதாள்போல ஒசியப்பட்ட இடையானது விழியின்கண் ணுரப்பட்ட சிவப்பாற்றுதற்கு நம்மைக்காக்க எதிராய்வந்த விருந்து இன்றுவரப்புணர்ந்த நமது மாதவம் என்ஞான்றும் வாழ்க. எ - று.

'இச்சொற்குமனம்பொறுத்தேன்சொல்லாய்' என்றது வருவிக்கப்பட்டது. புரக்க-காக்க. நமக்கு என்புழிவேற்றுமைமயக்கம். போல்-அசைநிலை. *"ஒப்பில்போலியு மப்பொருட்டாகும்." என்பதனுணர்க. தூவு - ஆகுபெயர். கொந்தளபாரம் - அளகபாரம். நுடங்கல் - ஒசிதல். 'மாதவமென்றும் வாழிய' என இயையும். (௩௯௬)

விருந்துகண்டொளித்தவூடல்வெளிப்படநோக்கிச்
சீறேலென்றவள்சீறடிதொழுதல்.

(இது வெளிப்படை,)

தெரியோர் பொருட்டன்று தேர்வின்றி யூடல் செயிர்த்தவர்க்குக்
கரியோர் தெளித்தென்ன காரணங் காட்டுவர் கானுண்டுதேன்
வரியோர் தொடைப்புயன் வாணன்றென் மாறை மலர்த்திருவே
பெரியோர் பொறுப்பரன் றேசிறி யோர்கள் பிழைத்தனவே.

இ - ள். மணத்தையுண்டு வண்டுகள் பண்ணைவாசிக்கும் மாலையையணிந்த புயத்தையுடையவாணன் தென்மாறைநாட்டிலிருக்குந் திருவையொப்பாய்! ஆராய்ச்சியின்றி யூடுதலொருபொருளையுடைத்தன்று, தெரிவாயாக; கோபித்தவாக்கால் ஆற்றுதலன்றிச் சான்றுயுள்ளோர் தெளிவித்து என்னைக் காரணங்காட்டுவர், என்னிடத்துக் குற்றமுண்டாயினுஞ் சிறியோர்கள் பிழைத்தன செய்தக்கால் பெரியோர்கள் பொறுப்பர், ஆதலால் யான்தொழுகின்றேன், என்பிழையைப்பொறுத்தருளவேண்டும். எ - று.

'ஊடலோர்பொருட்டன்றுதேர்' எனமாறுக. செயிர்த்தவர் - கோபித்தவர். கரியோர் - சான்றோர். கான் - மணம். தேன் - வண்டு. வரி - பண். ஓர்தல் - நண்டு வாசித்தல். தொடை - மாலை. அன்றும், ஏகாரமும் அசைநிலை. சீறடிதொழலென்னுங்கிளவிப்பொருளானும், வருஞ்செய்யுளில் என்பாதமிறைஞ்சுதலென்று தலைவிகூறுதலானும் 'தொழுகின்றேன்' என்னுஞ்சொல் வருவிக்கப்பட்டது. (௩௯௭)

இஃதெங்கையர்காணின்நன்றன்றென்றல்.

இஃதெங்கையர்காணின்நன்றன்றென்றல் எ - து. எங்கையராகிய பரத்தைமார்காணின் நீர்செய்தபணிவு குற்றமாய்முடியுமென்றல்.

---

* தொல்காப்பியம், சொல், இடையியல், சூ. ௩௦.

எண்போன நெஞ்சமு நீருமென் பாத மிறைஞ்சுதனுங்
கண்போலு மெங்கையர் காணினன் றேகயன் மாதிரத்துத்
திண்போ தகந்தொறுந் தீட்டிய வாணன் செழுந்தஞ்சைசூழ்
வண்போ தளவிய நீர்வையை நாட்டுறை மன்னவரே.

இ - ள். கயற்கொடியைத் திக்குகளிலிருக்குந் திண்ணிய யானைக டோறு மெழுதிய வாணன் செழுமையையுடைய தஞ்சையைச்சூழ்ந்த வளவியபோது கலந்துவரப்பட்ட நீரையுடைய வைகைநாட்டிலுறையும் மன்னவரோ! என்னை எண்ணுதல்போன நெஞ்சமும் நீரும் என்பாதம் வணங்குதலை நமக்குக் கண்ணையொக்கும் எனக்குத் தங்கையராகிய பரத்தையர் காணினன்றோ? எ - று.

எண் - எண்ணுதல். இறைஞ்சுதல் - வணங்குதல். எங்கையர் - என் தங்கைமார். நன்றே என்புழி ஓகாரம் எதிர்மறை. கயல் - ஆகுபெயர். மாதிரம்-திக்கு. போதகம்-யானை. தீட்டல்-எழுதல். அளவுதல்-கலத்தல். ()

அங்கவர்யாரையுமறியேனென்றல்.
(இது வெளிப்படை.)

மன்னும் புலவியை மாற்றியுந் தேற்றியும் வல்லவண்ணம்
இன்னுந் தெளிந்திலை யென்னேயென் னேயென்செய் கேனிதற்கு
முன்னம் படிந்து முழுகுநன் னீர்க்கங்கை முன்னுறையும்
அன்னம் படியுங்கொ லோவுவ ராழியி லாரணங்கே.

[இது பிறசெய்யுட்கவி.]

காமக்கிழத்தியைக்கண்டமைபகர்தல்.
(இது வெளிப்படை.)

போயே தெருவிற் றனிவிளை யாடும் புதல்வற்புல்ல
நீயே திலையல்லை நின்மக னேயிவ னீயுமவன்
தாயே வருகெனச் சேயன்ன வாணன் றமிழ்த்தஞ்சைமான்
ஏயே யெனநிற்ற லானதிக் தேனன்னை யெங்கையென்றே.

இ - ள். முருகவேளையொத்த வாணன் தமிழ்த்தஞ்சையிலிருக்கும் மான்போன்ற பரத்தையானவள் தெருவிற்போய்த் தனியேவிளையாடும் புதல்வனைத்தழுவியெடுத்தலைக்கண்டு யான் நீ அயலாளல்லை, நினக்குமகனே இவன், நீயும் அவன்தாயே, வருகவென்றழைக்க, அவள் அம்மொழிகேட்டு நாணத்தினால் ஏயேயெனநிற்றலான் அவள்தன்னை எங்கையென்றறிந்தேன். எ-று.

மகிழ்க என்பது முன்னிலை எச்சம். புதல்வன் - மகன். புல்லல்-தழுவல். ஏதிலை - அயலார். சேய் - முருகன். ஏயே என்பது நாணத்தின்வந்த அடுக்குமொழி. எங்கை - எனக்குத்தங்கை. (௫௦௦)

தலைவியைப்பாங்கிதணித்தல்.

(இது வெளிப்படை.)

மாவா ரணமன்ன வாணன்றென் மாறைநம் மன்னர்நின்னைப்
பாவாய் பணியவும் பார்க்கிலை நீயிடப் பாகமங்கை
தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை தழீஇயிதழிப்
பூவார் சடைமுடி மேல்வைத்த போதும் பொறுத்தனளே.

இ - ள். பாவைபோன்றவளே! பெரியயானையொத்த வாணன்தென் மாறைநாட்டில் நம்மன்னர் நின்னைப்பணிதலைச்செய்யவும் நீ பார்க்கிலை; சங்கரன் இடப்பாகத்தைநீங்காத அம்பிகை சங்கரன் கங்கைதன் கொங்கையைத்தழுவிக் கொன்றைப்பூவார்ந்த சடைமுடியின்மேல் வைத்தபோதும் பொறுத்தனள், இது கேட்டிலையோ? எ - று.

மங்கை - அம்பிகை. தாவாத - நீங்காத. இதழி - கொன்றை. உம்மை சிறப்பு. (௩0௧)

தலைமகள்புலவிதணியாளாகத்தலைமகனூடல்.

(இது வெளிப்படை.)

தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றனதருள்போல்
பழங்காத லெண்ணலென் பைதனெஞ் சேயிவள் பண்டுபைம்பொற்
கழங்கா டிடமுங் கடிமலர்க் காவுங் கடந்துபுள்ளும்
வழங்கா வழிநமக் கோர்துணை யாய்வந்த மானல்லளே.

இ - ள். துன்பமுற்ற என்னெஞ்சே! இவள்முன்பு செம்பொன்னாற் செய்த கழங்காடப்பட்ட இடமும், விளையாடப்பட்ட மணத்தொடுகூடிய மலர்ச்சோலையும் விட்டுநீங்கிப் புட்களும் இயங்காத பாலைநிலத்தின் வழியில் நமக்கொரு துணையாய்வந்த மான்போன்றவளல்லள், நிறைந்தொலிக்கும் புனலையுடைய வையையாறுசூழ்ந்த தஞ்சைவாணன் தன்னுடைய அருள் போன்ற தலைவி பழங்காதலை எண்ணவேண்டாம். எ - று.

'ஆர்தழங்குபுனல்' என இயையும். தழங்குபுனல் வினைத்தொகை. பைதல் - துன்பம். கடி - மணம். கா - சோலை. கடத்தல் - விட்டு நீங்கல். வழங்கல் - உலாவல். மான்-ஆகுபெயர். (௩0௨)

பாங்கிஅன்பிலைகொடியையெனத்தலைவனையிகழ்தல்.

பாங்கிஅன்பிலை ... ... யிகழ்தல் எ - து. பாங்கிதலைவனை யன்பிலாய் கொடியாயென இகழ்ந்துகூறல்.

மைந்நாண் மலர்த்தொடை வாணன்றென் மாறையெம் மன்னவுவந்
தந்நாண் முயங்கி யமிழ்தென வார்ந்தனி ரார்வமுற்று
முந்நாண் மதிவட்ட மென்முலை மாதை முனிந்துநஞ்சென்
றிந்நாண் மிகவுவர்த் தீர்புல வாகிற்றி ரெங்களையே.

இ - ள். கருநிறம்பொருந்திய முறுக்கவிழ் மலர்மாலையணிந்த வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் எமக்கு மன்னரே! அந்நாள் மூன்றும் பூரணைநாள் மதியினது வட்டம்போன்ற மெல்லிய முலைவட்டத்தையுடைய மாதை விருப்பமுற்றுப்புணர்ந்துமகிழ்ந்து அமுதென இன்பத்தை நுகர்ந்தீர்; இந்நாள் நஞ்சென்றுமுனிந்து மிகவும்வெறுத்து எங்களோடுபுலவாநின்றீர்.

மைந்நாண்மலர் - குவளைமலர். மன்ன-அண்மைவிளி. உவந்து-மகிழ்ந்து. முயங்கி - புணர்ந்து. ஆர்தல் - நுகர்தல். ஆர்வம் - விருப்பம். *நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணையென முதற்றிதிதொடுத்துப் பஞ்சமிவரைக்கும் முதலாம்வட்டம், சட்டிதொடுத்து தசமிவரைக்கும் இரண்டாம் வட்டம், ஏகாதசிதொடுத்துப் பூரணைவரைக்கும் மூன்றாம்வட்டமாதலின் 'முந்நாண் மதிவட்டம்' என்றார். உவர்த்தல்-வெறுத்தல். புலத்தல்-ஊடுதல். எங்களை என்புழி வேற்றுமைமயக்கம். 'அந்நாள்முன்னாள்' எனவும், 'ஆர்வமுற்றுமுயங்கியுவந்தமுது' எனவும், 'இந்நாணஞ்சென்று முனிந்து மிகவும்' எனவும், 'எங்களைப்புலவாநிற்றிர்' எனவும் இயையும். (௬௩)

ஆயிழைமைந்தனுமாற்றாமையும்வாயிலாகவரவேதிர்கோடல்.

ஆயிழை ... ... வெதிர்கோடல் எ - து. தலைவன்பரத்தையர்சேரிக்குத் தேரின்மேலேறிப்போம்போது தெரிந்தெடுத்த அணியையணிந்த புதல்வன் குறுக்காகநிற்க, அப்புதல்வனைத்தழுவி யெடுத்துக்கொண்டு தலைவன் ஆற்றாமையுடன் வந்துழி, தலைவியைப் புதல்வனுந் தலைவனாற்றாமையுந் தூதாக எதிர்கொள்ளுதல்.

வெள்ளம் பரந்தன்ன வேட்கைசென் றாலு மிகப்பெரியோர்
உள்ளஞ் சிறியவர் மேற்செல்வ ரோவொளிர் கோமளஞ்செய்
வள்ளங் கமல மலர்த்தஞ்சை வாணன்றென் மாறையன்னப்
புள்ளம் புனல்வய லூரபுன் காமம் புகல்வதன்றே.

இ - ள். கடல்புரண்டுவந்தாற்போலும் வேட்கைசெல்லினும் மிகவும் பெரியராயினோர் உள்ளஞ்சிறியவராகிய பரத்தையர்பால் செல்வரோசெல்

---

* நந்தை - ௧, ௬, ௧௧: பத்திரை - ௨, ௭, ௧௨: சயை - ௩, ௮, ௧௩: இருத்தை - ௪, ௯, ௧௪: பூரணை - ௫, ௧௦, ௧௫ :— என மதிவட்டங்கொள்ளப்படுவதனை. பிங்கலந்தையில் வானவர்வகைத்தொகுதியுட்காண்க.

லார்; விளங்காநின்ற அழகாற்செய்த கிண்ணம்போன்ற கமலமலரில் தஞ்சைவாணன் தென்மாறையன்ன புள்ளிருக்கும் அழகிய புனலையுடைய வயலூர் புல்லியகாமத்தை ஒருபொருளாய்ச் சொல்வதன்று. எ - று.

எனவே,—நீ பரத்தையர் சேரிக்குப்போன தன்மையையல்லை என்றவாறாயிற்று. வெள்ளம்-கடல். "கடலன்ன காமமுழந்து" என்றார்பிறரும். உள்ளஞ்சிறியவர்-பரத்தையர். ஓகாரம்-எதிர்மறை. கோமளம். அழகு. வள்ளம்-கிண்ணம். மலர் என்புழி-ஏழாம்வேற்றுமைத்தொகை. அம் - அழகு. புகல்வது - சொல்வது. தாமரைமலரில் அன்னப்புள்ளிருக்கும், ஒழிந்த பூவில்இராதெனப்பொருள்கொண்டவதனான், தலைவன் தன்னிடத்தல்லது பரத்தையர்பால் செல்வானல்லனென்பதாக உள்ளுறையுவமந்தோன்றியவாறுணர்க. வள்ளம் - கமலமலர். 'அன்னப்புள்ளம்புனல்' எனக்கூட்டுக.

மணந்தவன்போயபின்வந்தபாங்கியோடிணங்கிய
மைந்தனையினிதிற்புகழ்தல்.
(இது வெளிப்படை.)

இருமையி லேயும் பயன்களெல் லாந்தன்னை யீன்றநமக்
கொருமையி லேவந் துறைத்தகைந் தான்மைந்த னெனுஞ்சுடர்போல்
வருமயி லேகொண்டு மாதடிந் தானன்ன வாணன்றஞ்சைத்
திருமயி லேயனை யாய்புன லூரனைத் தேருடனே.

இ - ள். ஒள்ளிய ஞாயிறுபோல் ஒப்புச்சொல்லவரும் வேல்கொண்டு மாமரமாகநின்ற சூரனைவெட்டிய முருகவேள்போன்ற வாணன்தஞ்சை நகரிலிருக்கும்அழகியமயில்போன்றவளே! மைந்தன் இம்மை மறுமைகளில் தரும்பயன்களையெல்லாந் தன்னைப்பெற்ற நமக்கு ஒருமையாகிய இப்பிறப்பிலேவந்து பொருந்த பரத்தையர் சேரிக்கும்போம் புனலூரனைத்தகைந்து மனைக்கழைத்துக்கொண்டுவந்தனன். எ - று.

இருமை - இம்மை, மறுமை. ஒருமை-இப்பிறப்பு. உறுதல்-பொருந்துதல். சுடர்-ஞாயிறு. அயில் - வேல். ஏகாரம் - அசைநிலை. தடிதல்-வெட்டுதல். † "சூர்முதறடிந்த சுடரிலைநெடுவேல்" என்பதனானுணர்க. 'மைந்தனிருமையிலே' எனவும், 'வந்துறப்புனலூரனைத் தேருடனேதகைந்தான்' எனவும்மாறுக. (௪௰௫)

தலைவிதலைவனைப்புகழ்தல்.
(இது வெளிப்படை.)

கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லைக் குறிப்பினென்று
தண்டா தவர்சொன்ன சால்புகண் டேன்றல மேழ்புரக்கும்
வண்டார் மலர்ப்புயன் வாணன்றென் மாறை மகிழ்நர்முன்னாள்
உண்டா கியபழங் கேண்மையிற் காணு மொழிந்திலரே.

† திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம், வரி. ௪௬.

இ - ள். தல்மேழையுங் காக்கும் வண்டார்ந்த பூமாலையணிந்த புயத்தையுடைய வாணன்தென்மாறையிலிருக்குந் தலைவா! முன்னுண்டாகிய பழகியநண்பு இந்நாள்வரைக்கும் ஒழிந்திலர், ஆதலால் கருதமிடத்துக்கணவனினும் அணித்தான கேளிரில்லையென்று அறிவில் நீங்காத பெரியோர் சொன்ன மாட்சிமையை இன்றுகண்டேன். எ - று.

பாங்கி முன்னிலையெச்சம். கொண்டான் - கணவன்; உடலு முயிரு நெஞ்சு மன்புமொன்றாய்க் கலந்ததன்மை தந்தைதன்னையர்முதலாயினோர்க்கில்லையால் * "கொண்டானிற்றுன்னியகேளிர்பிறரில்லை" என்று கூறினென்றுணர்க. துன்னுதல்-கிட்டுதல். கேளிர் - சுற்றத்தார். மற்று-அசை. குறித்தல்-கருதல். தண்டாதவர் - நீங்காதவர். சால்பு - மாட்சிமை. மலர் - ஆகுபெயர். மகிழ்நர் - கணவர். கேண்மை - நட்பு. (சுOசு)

பாங்கிமனைவியைப்புகழ்தல்.

(இது வெளிப்படை.)

சிறந்தார் புகழ்தருந் தீம்புன லூரன்செய் தீமையெல்லாம்
மறந்தார்வ மெய்தி வணங்குத லாலிவள் வாணன்றஞ்சை
நிறந்தா ரகையன்ன நித்திலம் போலு நெடுங்குலத்தில்
பிறந்தார் நிறைந்தகற் போர்வடி வேபெற்ற பெற்றியளே.

இ - ள். இத்தலைவி மிக்காயினோர்புகழ்தரும் இனிமையாகிய புனலூரன்செய்த தீமையெல்லாம் மறந்து விருப்பமுற்று வனத்தன்மையளென்று கருதாது வணங்குதலான் வாணன்தஞ்சை நகரின்கண் ஒளியின் தாரகையொத்த முத்துப்போல் உயர்குலத்திற்பிறந்த மடவாருடைய நிறைந்த கற்பிலக்கணமெல்லாம் ஒருருவாகப்பெற்ற பெற்றியள். எ - று.

சிறந்தார்-மிக்கோர். †"உலகமுவப்பவலனேர்புதிரிதரு," ‡"பகல்கான்றெழுதரு" என்பனபோல 'புகழ்தரு' என்பது ஓர்சொல். ஆர்வம்-விருப்பம். நிறம் - ஒளி. நெடுங்குலம்-உயர்குலம், நெடுமால் என்பதுபோல. (சுOஎ).

இச்சொன்ன கிளவிகளெல்லாம் வாயில்வேண்டல்முதல் நான்குவகைக்கும் ஒக்குமாறு அறிந்துகொள்க.

பரத்தையிற்பிரிவு முற்றிற்று.

---

* நான்மணிக்கடிகை, செ. ருஎ.
† திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம், வரி. க.
‡ பெரும்பாணாற்றுப்படை, வரி. உ.

ஓதற்பிரிவு.

ஓதற்பிரிவு எ - து. தலைவன் கல்விகாரணமாகப்பிரிதல். தலைமகளை யெய்தியிருந்தே இவனோதுவான்பிரிவானேனெனின், முன்ஞானமில்லாதா னாகவே ஞானத்தின்வழியது ஒழுக்கமாகலானும், ஒழுக்கத்தின் வழித்தன் குலமாகலானும், இவையெல்லாங்குறைவீடாமேயெனின் ஆகாது, கற்பான் பிரியுமென்பதன்று; பண்டே குரவர்களாற்கற்பிக்கப்பட்டுக் கற்றான் அறம் பொருளின்ப வீடுபேறுகள் முதலிய நூல்களெல்லாம் இனிப்பரதேயத்து அவை வல்லோருளரெனிற் காண்பலென்று அவைவல்லார்க ளுளவழிச் சென்று தன்ஞானம் மேற்படுத்து அவர் ஞானங் கீழ்ப்படுத்தற்கு மெனக் கொள்க.

கல்விக்குப்பிரிவுதலைமகனுணர்ந்தோழி தலைமகட்குணர்த்தல்.

(இது வெளிப்படை)

மல்வித் தகங்கொண்ட தோளுடை யான்றஞ்சை வாணன்றெல்சீர்
கல்வித் தகன்புவி நாவில்வைத் தோன்வையை நாடனையாய்
கல்வித் தடங்கட லீந்திய காதலர் கற்றவர்முன்
சொல்வித்த வென்றழ லார்சுரம் போகத் துணிந்தனரே.

இ - ள். மற்றொழிலில் வல்லபங்கொண்ட தோளுடையானாகிய தஞ்சைவாணனது பழகிய புகழாகிய நல்லவிதையினை அகன்ற புவியினுள் ளோர் நாவில் பயிராக வைத்தவனது வையைநாடு போன்றவளே! கல்வி யாகிய பெரியகடலை நீந்திக் கரைகண்ட தலைவர் திசைகளிற் கற்றவர்முன் தாங்கற்ற கல்வியானுண்டாகிய கீர்த்தியாகிய வித்தைவிதைக்க என்றெ ண்ணி அழலார்ந்த சுரத்தின்கட்போகத் துணிந்தனர். எ - று.

மல்-மற்றொழில். வித்தகம்-வல்லபம். வித்து-விதை. புவி-ஆகுபெயர். தடங்கடல்-பெரியகடல். சொல்-கீர்த்தி. வித்த-விதைவிக்க. (௨௦௮)

தலைமகள்கார்ப்பருவங்கண்டுபுலம்பல்.

(இது வெளிப்படை.)

யாணர்க் குழன்மொழி யென்செய்கு வேன்கல்வி யெல்லையெல்லாம்
காணப் பிரிந்தவர் காண்கில ராற்கடன் மேய்ந்துதஞ்சை
வாணர்க் கெதிர்ந்தவர் மங்கையர் போலுமென் வல்லுயிரின்
உளணற்ப மென்னவெண் ணுவரு மேகமுருமுடனே.

இ - ள். அழகினையுடைய குழலிசைபோன்ற மொழியாய்! தஞ்சை வாணனுக்குஎதிராகியபகைவர் மனைவியர்போலும் தன்பழுழந்திருக்கின்ற

என்னுடைய வலியவுயிரை இனியவுணாக நுகர்தலொழிந்தென எண்ணிக் கடல்நீரையுட்கொண்டு இடியுடனே மேகம்வராநின்றது ; இதனைக் கல்வியெல்லாம்தாணப்பிரிந்ததலைவர் காண்கிலர், ஆதலால் யானென்செய்கேன்!

யாணர்-அழகு. செய்யா என்னும் வினையெச்சம் செய்து என்னும் இறந்த வாய்பாடாகப் பொருள்கொள்க. உருமு - இடி. (சு0க)

தலைமகளைப்பாங்கியாற்றுவித்தல்.

(இது வெளிப்படை.)

காதற் கயம்படிந் துன்னொடு காமக் கனிநுகரா
தோதற் ககன்ற வுணர்வுடை யோருடை நீருலகம்
மாதர்க் கமைந்தருள் வாணன்றென் மாறை வரக்கடவார்
ஆதற் கணங்கனை யாய்புய லேது வறிந்தருளே.

இ-ள். அணங்கனையாய்! காதலாகியகுளத்திற்படிந்து உன்னொடுகூடிக் காமமாகிய கனியைநுகராது ஓதற்பிரிவாகப் பிரிந்த அறிவுடையோர் பூமிதேவியார்க்குடையோனுகி யமைந்தருளப்பட்ட வாணன் தென்மாறையில் வரக்கட்வராதற்கு வந்தபுயல் நிமித்தமென்றறிந்தருள்வாய். எ - று.

கயம்-குளம். புயல்-மேகம். ஏது-நிமித்தம். (ஆக0)

ஓதற்பிரிவு முற்றிற்று.

காவற்பிரிவு.

காவற்பிரிவு எ-து.நாடுகாத்தற்குப்பிரியும்பிரிவு. இவன்நாட்டைப்பிறர் புகுந்துநலிதலுங் கைக் கொள்வதுஞ் செய்யப்பட்டவை நீக்குதற்குப்பிரியின் ஆண்மையும்மதிப்பும் இலனுமெனின்,நாட்டைநலிவாருளராகநலிவுகாத்தற்குப் பிரியுமென்பதன்று.; நாட்டகத்துநின்று நகரத்துவந்து முறைசெய்யமாட்டாதமூத்தோரும்பெண்டிரும் இருகைமுடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாருமென இத்தொடக்கத்தார் முறைக்கருமங்கேட்டுத் திருத்துதல் பொருட்டாகவும், வளனில்வழி வளந்தோற்றுவித்தற்கும், "தேவர் குலமே சாலையம்பலமே" என்றித்தொடக்கத் தனவற்றை ஆராய்தற்கும், மதிகுடி யோம்புதற்கும் பிரியுமென்பது. அல்லதூஉம், பிறந்தவுயிர்தாயைக் கண்டு இன்புறுவதுபோலத் தன்னாற் காக்கப்படும் உயிர்வாழ்சாதிகள் தன்னைக்கண்டு இன்புறுதலின் தான் அவர்கட்குத் தன்னுருவுகாட்டுதற் பொருட்டாகவும் பிரியுமெனக்கொள்க.

தோழிதலைவன்காவற்பிரிவுணர்த்தல்.

(இது வெளிப்படை.)

விண்காவல் கொண்ட திலோத்தமை தான்முதன் மெல்லியலார்
கண்காவல் கொண்டருள் காரிகை காவலர் கார்க்கடல்சூழ்
மண்காவல் கொண்ட மனத்தின ராயினர் வாணன்றஞ்சைப்
பண்காவல் கொண்ட மொழிச்செய்ய வாயிதழ்ப் பைங்கிளியே.

இ - ள். விண்ணுலகப் பதவிக்கு உலகில்தவஞ்செய்து ஒருவர்வாராத படிக்கு இடையூறு செய்தகாவல்கொண்ட திலோத்தமை முதலாகிய மடவார் கண்களை அயலில்நோக்காமற் காவலாய்க்கொண்டருளபட்ட அழகையும், வாணன் தஞ்சைநாட்டில் பண்ணைத் தன்வாயினின்றும் போகாமற் காவல்கொண்ட மொழியையும், சிவந்தவாயிதழையுமுடைய பைங்கிளியே! காவலர் கரியகடல்சூழ்ந்த மண்ணை காவல்கொண்ட மனத்தினராயினர்.

விண்-விண்ணுலகு. காரிகை-அழகு. 'காரிகைபண்காவல்கொண்ட, என இயையும். (௪௧௧)

தலைமகள்கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

(இது வெளிப்படை.)

மன்னுயிர் காவலன் வாணன்றென் மாறையில் வந்தளியார்
என்னுயிர் காவல ரேந்திழை யாயித யம்புலர்த்திக்
கொன்னுயிர் வாடைக் கொடும்பனி நீரிற் குளிர்குழைத்துப்
பின்னுயி ராமலென் மேற்பூசு நாளுமென் பேசுவதே.

இ - ள். உலகத்தில்நிலைபெற்ற உயிர்களைக்காக்கின்ற காவலனாகிய வாணன்தென்மாறையில்ஏந்திழையாய்! நெஞ்சையுலர்த்தி அச்சத்தைவீசும் வாடைக்காற்றுக் கொடியதாகிய பனிநீரிலே குளிரைக்குழைத்துப் பின் யான் மூச்சுவிடாமற்பூசுநாளினும் காவலர்வந்துஎன்னுயிரை யளியார், இனி பேசுவதுஎன்? எ - று.

புலர்த்தல்-உலர்த்தல். கொன்-அச்சம். உயிர்த்தல்-வீசுதல். உயிராமல்-மூச்சுவிடாமல். 'பூசுநாளுங்காவலர்வந்தளியார்பேசுவதென்' என இயையும்.

தோழியாற்றுவித்தல்.

(இது வெளிப்படை.)

வரற்கால மென்றென் றெனப்பல கூடல் வளைத்துதிரம்
விரற்கால வின்று மெலியன்மின் னேசென்று மேதினிக்கா த்
துரற்கால குஞ்சர மஞ்சமஞ் சூர்ந்துறை வீசுகின்ற
சரற்காலம் வந்தடைந் தார்தஞ்சை வாணன் றமிழ்வெற்பரே.

இ - ள். மின்னே! போய் நாட்டைக் காத்து உரலைப்போன்ற கால்களையுடையனவாகிய குஞ்சரங்கள் அஞ்சும்படி முகில்நடந்து துளிகளையெறியப்பட்ட சரற்காலமென்றறிந்து தஞ்சைவாணன் தமிழ்வெற்பர் வந்தடைந்தனர், ஆதலால் தலைவர் வருங்காலம் எப்போதெப்போதென்று பலகால் கூடல்வளைத்து விரல் உதிரமொழுக இன்றுமெலிய வேண்டாம். எ - று.

என்றேன்று என்பது வினாவின்கண்வந்த அடுக்குமொழி. கூடல் வளைத்தல் - பிரிந்த கணவன் வருதற்கு விரலால்வளைத்துக் குறிபார்த்தல். கால - ஒழுக. குஞ்சரம் - யானை ; சாதியொருமை. உறை-துளி. (௬௧௧)

காவற்பிரிவு முற்றிற்று.

தூதிற்பிரிவு.

தூதிற்பிரிவு எ - து. இருவரசரும்தம்மிற்போராநின்றவிடத்து அவ்வரசைச்சந்துசெய்வித்தற்குப்பிரியும்பிரிவு. அரசரைச்சந்துசெய்வித்தற்குப்பிரியுமெனின், தூதுவராவார் பிறர்க்குப்பணிசெய்து வாழ்வர். அவர்போருவிறப்பென்னையோவெனின், தூதுவர்போலச்சந்து செய்வித்தற்குப்பிரியுமென்பதன்று; இருவரசரும்நாளைப்பொருதுமென்றுமுரண்கொண்டிருந்தநிலைமைக்கண்தானருளரசனாதலின் இம்மக்களும்இவ்விலங்குகளுமெல்லாம்படஇவையிருகுலத்திற்கும் ஏதம்நிகழ்ந்தது என்செய்யுமோ, யான் இப்போரொழிப்பனென்று இருவரையுமிரக்கு சந்துசெய்வித்தலுமொன்று. தேவரும் அசுரரும் பொருதகாலத்து தேவரையும் அசுரரையும் மிக்கசெய்தாரை யானொறுப்பலென்று பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்ததுபோல இவரையும் மிக்க செய்தாரையொறுப்பலென்று சந்துசெய்வித்ததெனக்கொள்க.

தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

தூதரிக வன்பர் செலத்துணிந் தாரொன்றுஞ் சொற்புலவோர்
மாதாக வன்பசி தீர்த்தருள் வாணன்றென் மாறையிந்து
மீதாக வம்பு கிடக்தன போலுண்கண் மெல்லியலிப்
போதாக வம்புகல் வோரிக லார்தம் புரம்புகவே.

இ - ள். எஞ்ஞான்றுஞ் சொல்விலேவல்ல நாவலர்களது பெரியதாகத்தையும் வலியப்பிணியையுந் தீர்த்தருளப்பட்ட வாணன் தென்மாறைநாட்டில் சந்திரன்மேல் அம்புகிடக்தனபோன்ற முகத்தின்மேல் மையுண்டகண்ணையுடைய மெல்லியலே! இப்போது பூசலைச்சொல்வோராகிய மாறுபாடுடைய இருபெரு வேந்தரும் பாசறைநீங்கித் தம்புரங்களிற்சென்றுபுக அன்பர் தூதாகப்போகத் துணிந்தனர். எ - று.

இந்து-சந்திரன். மெல்லியல்-அண்மைவிளி. ஆகவம்-போர். இகலார்-மாறுபாடுடைய இருபெருவேந்தர். (௬௧௪)

தலைவி முன்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

(இது வெளிப்படை.)

மலிகின்ற வண்புகழ் வாணன்றென் மாறையை வாழ்த்தலர்போல்
மெலிகின்ற சிந்தையு மேனியுங் கொண்டு விளர்ப்பெனும்பேர்
பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந் தேனைப் புரந்தருளார்
நலிகின்ற முன்பனி நாளினண் ணார்முனை நண்ணினரே.

இ - ள். நிறைகின்ற வளவிய புகழையுடைய வாணன்தென்மாறை நாட்டைவாழ்த்தாதவர்போலமெலிகின்றநெஞ்சையும்மேனியையும் உடைத்தாய் விளர்ப்பென்கின்ற பேர்பொலிகின்ற சட்டைபோர்த்திருந்த என்னை மாறுபாடுடைய இருபெருவேந்தரதுபடையின்கட்சென்றார் வருத்தஞ்செய்கின்றமுன்பனி நாளினும் வந்துகாத்தருளார். எ - று.

மலிதல்-நிறைதல். சிந்தை-நெஞ்சு. மேனி - வடிவு. கஞ்சுகம்-சட்டை. 'விளர்ப்பெனும் பேர்பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந்தேனை' என்றது முன்பனிக்குளிர்க்குக் கஞ்சுகம் போடவேண்டுதலான் வேட்கைநோய்தந்து விளர்ப்பென்னுங் கஞ்சுகத்தைப் போர்த்திருந்தேனென்று கூறினளென வுணர்க. புரத்தல்-காத்தல். நண்ணார்-மாறுபாடுடைய இருபெருவேந்தர். முனை-படை. நண்ணினர்-சென்றனர். (௬௧௫)

தோழியாற்றுவித்தல்.

(இது வெளிப்படை.)

சுற்றுங் குழலின் பிணிவிடுப் பான்வந்து தோன்றினர்பார்
முற்றும் பொழிகின்ற முன்பனி காண்முகி லுங்கட லும்
வற்றும் பருவத்து மண்புரப் பான்றஞ்சை வாணனொன்னார்
செற்றும் படையின்வெம் போர்தணிப் பானன்று சென்றவரே.

இ - ள். சொருகுங் குழலையுடையாய்! மேகமும் கடலும் வறக்குங் காலத்தும் உலகத்தைக்காப்போனாகிய தஞ்சைவாணன் ஒன்னாரை வெகுளும் படைபோல் இருபெரு வேந்தர் பொரும் வெவ்வியபோரைத் தணிக்கும் பொருட்டுத் தூதாகவந்துசென்றவர் பார்முழுதும்பொழிகின்ற முன்பனிக் காலத்தில் நின் வேட்கைநோயைத் தீர்க்கும்பொருட்டு வந்துதோற்றினார், நீ புலம்பலொழிவாய். எ - று.

சுற்றல்-சொருகுதல். குழல்-அண்மைவிளி. பான்இரண்டும் வினையெச்சம். நாள்என்புழி ஐந்தனுருபுதொக்கது. உம்மை - எதிர்மறை. செற்றல்-வெகுளல். படையின்-படைபோல். (௬௧௬)

தூதிற்பிரிவு முற்றிற்று.

துணைவயிற்பிரிவு.

துணைவயிற்பிரிவு. எ - து. நண்பாகிய வேந்தனுக்குப் பகைவேந்தர் இடையூறுற்றவழி அவ்விடையூறு தீர்த்தற்குத் தலைமகன் துணையாகப் பிரிதல். தன்னுழையரில் ஒருவனைப் படைகூட்டிச் செல்லவிடாது தான் போதல் வேண்டுமென்பது என்னையெனின், நட்புமிக்கால் தானே யவனாயிருத்தலின் அவன்கருமந் தன்கருமமாயெண்ணி விரைவினெழுந்து அப்பகைநீக்கத் தானே போயினனெனக்கொள்க.

துணைவயிற்பிரிந்தமைதோழிதலைமகட்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

கண்பான மன்னர்க் கிடர்தணிப் பானெண்ணி நல்லுதவிப்
பண்பான மன்னர் படர்தலுற் றார்பனி நீர்பொழியும்
தண்பா னலந்தொடை யம்புய வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
வெண்பா னலங்கொள்செவ் வாயன்ன மேயன்ன மென்னடையே.

இ - ள். பனிபெய்யும் நீரைப்பொழிகின்ற தண்ணிய கருங்குவளை மாலையணியப்பட்ட அழகிய புயத்தையுடைய வாணன் தமிழ்த்தஞ்சையில் வாழ்கின்றவெண்மை நிறம்பொருந்திய பாவின் இனிமையைக் கொள்ளுஞ் செய்யவாயையும், அன்னம்போன்ற மெத்தென்ற நடையையு முடையாய்! நம்மன்னர் தமக்கு நட்பான மன்னர்க்குப் பகைவந்தால் பகையால்வந்த துன்பத்தைத் தணிக்கும் பொருட்டாககருதி நல்லுதவிக்குணத்தினாலே செல்லலுற்றார். எ - று.

இடர் - துன்பம். தணித்தல் - தீர்த்தல். எண்ணல் - கருதல். பண்பு-குணம். படர்தல் - செல்லுதல். பானல்-கருங்குவளை. அம் - சாரியை. தொடை-மாலை. அம்-அழகு. நலம் - ஆகுபெயர். செவ்வாயந்நடை என்புழி-உம்மைத்தொகை. மென்னடை - ஆகுபெயர். பின்பனிக்காலமாதலால் 'பனிநீர்பொழியுந் தண்பானல்' என்றுகூறியவாறுணர்க. (சுகஎ)

தலைமகள்பின்பனிப்பருவங்கண்டுபுலம்பல்.

(இது வெளிப்படை.)

இன்னற் படுகின்ற வென்னையெண் ணார்தமக் கின்றுணையாம்
மன்னற் குதவி பிரிந்தநங் காதலர் வாணன்றஞ்சைக்
கன்னற் கடிக்கையு மிவதல் லாற்பகல் காண்பரிதாம்
பின்னற் கனையிருள் கூர்துன்ப மேவிய பின்பனியே.

இ - ள். நமக்கினியதுணையாகிய மன்னர்க்கு உதவியாகப்பிரிந்த நம்முடைய காதலர் வாணனது தஞ்சைநகரில் நாழிகை யறிவிக்கும் வட்டிலான் நாழிகையறிவதல்லது ஞாயிற்றைக்காண்பரிதாம் பின்னலாகிச்செறிந்த இருள்மிகுந்து துன்பத்தைப்பொருந்திய பின்பனிக்காலத்துத் துன்பப்படுகின்ற என்னைநினையார், யானென்செய்கேன்! எ - று.

இன்னல்-துன்பம். கன்னல்கடிகை-நாழிகை: பகல்-ஞாயிறு. காண்பரிதாம் என்னும் பெயரெச்சம் *"தத்தமெச்சமொடுசிவணுங்குறிப்பி-னெச்சொலாயினுமிடைநிலைவரையார்." என்னுஞ்சூத்திரவிதியால்இடையேபல சொல்வரினும் பனி என்னும் பெயரைக்கொண்டுமுடிந்தது. (௬௧௮)

தோழியாற்றுவித்தல்.

(இது வெளிப்படை.)

வடுக்கண் டனையகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பின்
அடுக்கங் குளிர வசைகின்ற வாடை யகன்றவர்க்கு
நடுக்கஞ்செய் பின்பனி நாளின்வந் தாரமர் நண்பனுற்ற
இடுக்கண் களையவென் றேயகன் கான மிகந்தவரே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பிடத்து மாவடுவைக்கண்டாற்போன்ற கண்ணையுடைய மங்கைநல்லாய்! மலைப்பக்கமெல்லாங்குளிர அசைந்துவருகின்ற வாடைக்காற்று பிரிந்தவர்க்கு நடுக்கஞ்செய்யப்பட்ட பின்பனிக்காலத்துப் போரிடத்து நட்புக்கொண்ட வேந்தனுற்ற துன்பத்தை நீக்கவென்று அகன்ற சுரத்தைக்கடந்தவர்வந்தார், நீபுலம்பலொழிவாய்.

வடு-மாவடு. அடுக்கம் - மலைப்பக்கம் வாடை-வாடைக்காற்று. அமர் - போர். இடுக்கண் - துன்பம். கானம் - சுரம். இகந்தவர் - கடந்தவர். (௬௧௯)

துணைவயிற்பிரிவு முற்றிற்று.

பொருள்வயிற்பிரிவு.

பொருள்வயிற்பிரிவு எ - து. பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும்பிரிவு எனின், முன் பொருளிலனுமாகவே "எள்ளுநர்ப்பணித்தலு மிரந்தோர்க்கீதலு நள்ளுநர்நாட்டலு நயவாரொறுத்தலும்" என்றும் இவையெல்லாம் பொருட் குறைபாடுடையார்க்கு நிகழாமையான் இக்குறைபாடெல்லாம் உடையனும்; அவையுடையானது பொருவிறப் பெண்ணையோவெனின், பொருளிலனாய்ப்பிரியுமென்பதன்று; தன்முதுகுரவராற் படைக்கப்பட்ட பலவேறுவகைப்பட்ட பொருள்களெல்லாங் கிடந்தது, மன்னன் அது

---

* தொல். சொல். வினையியல், சூ. ௬௦.

கொண்டு துய்ப்பது ஆண்மைத்தன்மையன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள்கொண்டு வழங்கிவாழ்தற்குப் பிரியுமென்பது. அல்லதூஉம், தேவகாரியமும் பிதிர்க்காரியமும் தனது தாளாற்றலாற்படைத்த பொருளாற்செயத் தனக்குப்பயன்படுவன : என்னை, தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறாராகலான் அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியுமெனக்கொள்க.

தோழி தலைமகட்குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

மஞ்சைப் புனைமதின் மாறைவ ரோதயன் வாணர்பிரான்
தஞ்சைப் பதியண்ண லெண்ணலர் போற்றனி காமிருக்க
நெஞ்சைப் பொருள்வயின் வைத்துநங் கேள்வர்கள் னீண்மதியின்
பிஞ்சைப் புரைநுத லாய்பிரி வானின்று பேசினரே.

இ - ள். நல்லகிண்ட பிறைபோலு நுதலையுடையாய்! முகிலையணிந்த மதில்சூழ்ந்த மாறைநாட்டில் வரத்தினாலுதயஞ்செய்த வாணர் குலத்துக் கதிபனாகிய தஞ்சைப்பதியில் வேந்தனை யெண்ணாதவர்போலத் தனியாய் நாமிருக்கத் தன்னெஞ்சைப் பொருளிடத்துவைத்து நங்கணவர்பிரியும் பொருட்டாக இன்று சொல்லினர். எ - று.

மஞ்சு - முகில். வரோதயன் - முற்றுவினையெச்சம். அண்ணல் - வேந்தன். எண்ணலர் - பகைவர். மதியின்பிஞ்சு - பிறை. வான்-வினையெச்சம்.

தலைவி இளவேனிற்பருவங்கண்டுபுலம்பல்.

(இது வெளிப்படை.)

கங்க ணிரங்க வரும்பொரு டேட கடந்தவன்பர்
செங்க ணிருங்குயி லார்ப்பது கேட்கிலர் செந்தமிழோர்
தங்க ணிடும்பை தவிர்த்தருள் வாணன்றென் றஞ்சைவஞ்சி
திங்க ணிவந்தது போற்கவி னார்முகத் தேமொழியே.

இ - ள். புலவர் தம்மிடத்துண்டாகிய மிடித்துன்பத்தைத் தீர்த்தருளப்பட்ட வாணன்தென்தஞ்சையிலிருக்கும் வஞ்சிக்கொம்பானது திங்களையேந்தியதுபோன்றஅழகார்ந்த முகத்தையும் இனிமையாகிய மொழியையுமுடையாய்! நம்முடைய கண்ணானது கலுழ அரியபொருள் தேடநடந்த அன்பர்இளவேனிற்காலம்வந்து செங்கண்ணையுடைய கருங்குயில்ஆரவாரிப்பது கேட்கிலர், யானென்செய்கேன்! எ - று.

இடும்பை - துன்பம். வஞ்சி - வஞ்சிக்கொம்பு. நிவத்தல் - ஏன்றேந்தல். கவின் - அழகு. ஆர்த்தல் - பொருந்துதல். (௪௨௧)

தலைவியைத்தோழியாற்றுவித்தல்.

(இதுவெளிப்படை.)

வார்த்தன பார மடமயி லேகுயின் மாருதமாம்
தேர்த்தனி வீரன் றிருநாளும் வந்தது சேர்மின்சென்றூர்
தார்த்தட மேரு வெனும்புய வாணன்றஞ் சாபுரிநின்
றூர்த்தது கேட்டுவந் தார்பொரு டேட வகன்றனரே.

இ - ள். வார்கட்டிய தனபாரத்தையுடைய மடமயிலேபோல்வாய்! தார்பொருந்திய பெரியமேருவென்னும் புயத்தையுடைய வாணன்தஞ்சாபுரியினின்று தென்றற்றேராயுடைய ஒப்பிலாதவீரனென்னும் காமன் திருவிழாவந்தது ; பிரிந்துசென்றவர்கள் தலைவியரிடத்துப்போய்ச் சேர்மினென்று குயிலார்த்தது கேட்டுப் பொருள்தேடப் பிரிந்துபோனவர் நம்பக்கல் வந்தனர், நீ புலம்பலொழிவாய். எ - று.

வார் - கச்சு. மாருதம் - தென்றல். வீரன் - மாரன். 'குயிலார்த்தது' எனவும், 'அகன்றவர் வந்தார்' எனவும் இயையும். (சஉஎ)

பொருள்வயிற்பிரிவு முற்றும்.

தலைமகன்தலைமகளது உருவுவெளிப்பாடு கண்டுசொல்லல்.

தலைமகன் .... சொல்லல் எ - து. கல்விவயிற்பிரிவு முதலாய ஐந்தினுள்ளும் தூதுமுதலியவும்காரணமாகிய பிரிவின்கண் அவ்வினையோராண்டின்கண்முடியாது நீட்டித்தவழி தலைமகன் தலைமகளது உருவுவெளிப்பாடு கண்டு சொல்லுதல்.

மைக்குஞ் சரகிரி யாற்றஞ்சை வாணன் மருவலரைக்
கைக்குங் களங்கெழு பாசறை யூடு கயலும்வில்லும்
மொய்க்குஞ் சுடரிள வம்புலி தானு முயங்கியெல்லாத்
திக்குந் தொழவரு மேசுரு ளோலைத் திருமுகமே.

இ - ள். தஞ்சைவாணன் கரிய யானைக்கூட்டத்தில் பகைவரைக் கோபிக்குங் களம்போன்ற பாசறையுள்ளே கயல்போன்ற கண்ணும் விற்போன்ற புருவமும் மொய்க்கும் ஒளியையுடைய இளம்பிறைபோன்ற நுத

னும் கூட்டச் சுருண்டவோலையையுடைய திருமுகமானது எல்லாத்திக்கினும் யான்தொழவரும். எ - று.

குஞ்சரம் - யானை. நிரை - கூட்டம். கேழ - உவமஉருபு. கைத்தல்- கோபித்தல். முயங்குதல் - கூடுதல். கயலும் வில்லும் புலியும் மூவேந்தரிலச் சினையாதலான் அம்மூவரும் இலச்சினை யிட்டெவரவிடுத்த சுருளோலைத் திருமுகமென்று எட்டுத் திக்கும் தொழவருமென்று சிலேடையால் ஒருபொருள் தோன்றியவாறுணர்க. (௪௨௩)

பாசறைமுற்றிமீண்டுதேர்வயின்வந்ததலைவன்பாகற்குச்சொல்லல்.

(இது வெளிப்படை.)

மால்கொண்ட வாரண வாணன்றென் மாறை வலவநண்ணார்
கால்கொண்ட வாளமர் கையகல் பாசறைக் கைவயின்முட் [தேர்
கோல்கொண்ட வாறுநின் னேவல்கொண் டியானிக் கொடிநெடுந்
மேல்கொண்ட வாறுநம் மூர்வந்த வாறும் வியப்பெனக்கே.

இ - ள். மதத்தால் மயக்கங்கொண்ட யானையையுடைய வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் வலவனே! பகைவரிடங்கொண்ட வாள் பொருந்திய பாசறையைக் கையகலப்பட்ட நீ கையிடத்தில்தாற்றுக்கோல் கொண்டவாறும், நின்னேவலைக்கொண்டு யான்இந்தக் கொடிபொருந்திய நீண்டதேர் மேற்கொண்டவாறும், நம்மூர்வந்தவாறும் வியப்பாய் இருந்தது. எ - று.

மால் - மயக்கம். கால் - இடம். அமர்தல் - பொருந்தல். கையகலல் - நீங்குதல். முட்கோல் - தாற்றுக்கோல். வியப்பு - அதிசயம். (௪௨௪)

தலைமகளோடிருந்ததலைமகன்கார்ப்பருவங்கண்டுசொல்லல்.

(இது வெளிப்படை)

கொத்தல ரோதியங் கொம்பரன் னாள்பொங்கு கொங்கைவிம்ம
முத்தல ராக முயங்கினம் யாமுழு நீர்விழிபோல்
மைத்தலர் நீல மலர்வயல் சூழ்தஞ்சை வாணன்வண்மைக்
கைத்தல மான வினிப்பொழி வாழிய கார்முகிலே.

இ - ள். கார்காலத்துமுகிலே! கொத்தாயிருக்கும் மலரைத்தரித்த கூந்தலையுடைய் கொம்புபோல்வாளது மிகுந்த கொங்கைபூரிக்க முத்துமாலை விரிந்தமார்பையாம்முயங்கினம்; நிறைந்தநீரிற் கண்போலக் கருமையுடைத்தாய் அலரப்பட்ட நீலமலர்பொருந்திய வயல்சூழ்ந்த தஞ்சைவாணன்

கொடையையுடைய கைத்தலத்தீங்கோப்பாக இனிப்பொழிவாய், உலக மெங்கும் வாழ்க எ - று.

ஓதி - கூந்தல். பொங்குதல் - மிகுதல். விம்முதல்-பூரித்தல். முந்து-ஆகுபெயர். மைந்து-வினையெச்சம். வண்மை - கொடை. மான - ஒப்பாக. வாழிய - உலகம்வாழ்க. (௬௨௫)

மூன்றாவது கற்பியல் முற்றிற்று.

களவியல் ௨௮௦, வரைவியல் ௮௯, கற்பியல் ௫௯.

ஆ இயல் ௩-க்குச் செய்யுள் ௬௨௫.

தஞ்சைவாணன்கோவையுரை

முற்றுப்பெற்றது.

சீரறு காலனைச் செற்றார் தியாகர் சிலம்பனையாய்
நேரறு காளையை யீன்றா ளுக்கீது நிகழ்த்துவமோ
ஓரறு கால்வண் டுறைகுழன் மானை யுயிர்மணஞ்செய்
தீரறு காற்றெய்வ நன்னீர் தெளிக்கநம் மில்லினென்றே.

இச்செய்யுள் ௬௫௫ - வது செய்யுளுக்குப்பதில் சென்னைக் கல்விச் சங்கத்துத்தமிழ்ப் புலவராயிருந்த புதுவை-நயநப்பமுதலியார் பதிப்பித்த மூலப்பிரதியில் கண்டது.

அகப்பொருட்செய்தி நாள்வரையறைச்
செய்யுள் தீபிகை.

செய்யுள்.	க	முதல்	ஙங	வரையில்	முதனாள்.
,,	ஙச	,,	ஙஅ	,,	இரண்டாநாள்.
,,	ஙகூ	,,	சாஅ	,,	மூன்றாநாள்.
,,	சாகூ	,,	அகூ	,,	நான்காநாள்.
,,	கூ0	,,	க00	,,	ஐந்தாநாள்.
,,	க0க	,,	கருகூ	,,	ஆறாநாள்.
,,	கசா0	,,	கஅகூ	,,	ஏழாநாள்.
,,	ககூ0	,,	ககூங	,,	எட்டாநாள்.
,,	ககூச	,,	உ0அ	,,	ஒன்பதாநாள்.
,,	உ0கூ	,,	உகச	,,	பத்தாநாள்.
,,	உகரு	,,	உஉஎ	,,	பதினொன்றாநாள்.
,,	உஉஅ	,,	உஙசா	,,	பன்னிரண்டாநாள்.
,,	உஙஎ	,,	உஙஅ	,,	பதின்மூன்றாநாள்.
,,	உஙகூ	,,	உருங	,,	பதினான்காநாள்.
,,	உருச	,,	உருரு	,,	பதினைந்தாநாள்.
,,	உருசா	,,	உஎங	,,	பதினாறாநாள்.
*	*	*	*	*	*
,,	உஎச	,,	உஅஎ	,,	ஐம்பத்தொன்றாநாள்.
,,	உஅஅ	,,	ங0ச	,,	ஐம்பத்திரண்டாநாள்.
,,	ங0ரு	,,	ஙசஅ	,,	ஐம்பத்துமூன்றநாள்.
,,	ஙசகூ	,,	ஙருச	,,	ஐம்பத்துநான்காநாள்.
,,	ஙருரு	,,	ஙசாரு	,,	ஐம்பத்தைந்தாநாள்.
,,	ஙசாசா	———		,,	ஐம்பத்தாறாநாள்.

* பதினாறநாள் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிந்த தலைமகன் ஐம்பத்தோன்றநாள் மீண்டுவந்தமையால் முப்பத்துநான்குநாள் இடைப்பட்டதெனவறிக.

உ

தஞ்சைவாணன்கோவைச்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

முற்றிற்று.